தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, மாசி 29 (12-3-'60). சனிக்கிழமை | இதழ் 39

சீமான் நேருவுக்கு வாய்த்த ஆமாஞ்சாமிகள் !

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாதவர்களின் பட்டியலில் கதராடைக்காரர்கள் மிகவும் அழுத்தமாகத் தங்களுடைய பெயர்களைப் பதிய வைத்துக்கொண்டுள்ளார்கள். புதுக் காங்கிரசுக்காரர்கள், திடீரென்று மந்திரி மாணிக்கவேலரைப் போல் கதர்க்குல்லாய் மாட்டிக் கொண்டவர்கள் மட்டுமல்ல; பழைய மந்திரிகளின் பட்டியலிலேகூட இடம் வைத்துக்கொண்டிருக்கும் பக்தவத்சலமும் கழகக் கொள்கைகளைக் கண்டிப்பதில் தனக்குள்ள ஆசையினைக் காட்டிக்கொள்கிறார். பத்து லட்சத்துப் பக்தவச்சலம் படித்தவைகளை மறந்துவிட்டுப் பதவிக்கு வந்தவர். மந்திரி பதவி இல்லாவிட்டால் காங்கிரசுக் கட்சிக்கும் தனக்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை என்று ஓடிவிடுவார். 1952 பொதுத் தேர்தலில் பொன்னேரித் தொகுதியில் பாடுகளை நம்பிப் போட்டியிட்ட அவர் மூக்குடைபட்டுக் குப்புற வீழ்த்தப்பட்டார். அக்காலத்தில முக்காடு போட்டுக் கொண்ட அரசியல் விதவையாக காங்கிரசுக்கட்சிப் பணியை விட்டே விலகியிருந்தார். 'பாரததேவி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் போனார். அங்கிருந்தும் தன்னுடைய பதவி ஆசையை விட்டுவிடாமல், இராசகோபாலாச்சாரியின் கருணைக்காகத் தன்னை எவரெவர்க்கோ ஏலம் பேசி எட்டிப்பிடித்தார் எம். எல். சி. எனும் பதவியை! மக்கள் மன்றத்திலேயிருந்து மாடுகளின் பின்னே விரட்டப்பட்டவர் கொல்லைப்புறக் கதவினைத் திறந்து ஆச்சாரியார் வழிகாட்ட, மந்திரி சபைக்குள்ளே நுழைவதற்கு இலாயக்கில்லா விட்டாலும் கூட வெட்கத்தைவிட்டுப் பதவியேற்றுக் கொண்டார்! மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிக்காதவர், பராமத்து மந்திரியாக இருந்தவர், மடலாய மந்திரியாக இருந்தவர், இருந்துகொண்டிருப்பவர் என்ற பல பெருமைகள் அவருக்குண்டு. அவரது பத்து லட்சம் கதையை வைத்துச் சட்ட மன்றம் எள்ளி நகையாடியது. அதையே தமிழகமும் தட்டிக் கேட்ட போது பதில்கூறத் தெரியாமல் கோட்டான் குரலெடுத்து அவர் அலறியதையும் அரசியல் நினைவுள்ளோர் மறந்துவிட முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பத்துலட்சம் பக்தவத்சலம் பழி சுமத்துகிறாரென்றால் அவருக்கு காங்கிரசின் கொள்கையிலே உள்ள பற்றுதல் அல்ல காரணம். இருக்கும் பதவி பறிபோய்விடக் கூடாதே என்ற பயம்தான்! 194--லிருந்து தொடர்ச்சியாக மந்திரியாக இருக்கும் இந்த மாமேதையின் அரசியல் அறிவு, இன்னும் அரை குறையாகவே இருப்பதனால்தான் காங்கிரசுக்கட்சிப்பணிக்குத் தன்னைத் தருவதற்கு அவருடைய ஆசை, பேராசைப் பித்துக்கொண்ட மனம், இன்றளவும் இசைவு தருவதில்லை. காமராசருக்கு வாயாகப் பேசிக் கொண்டிருக்கிறார் மேல்சபையில்! காமராசர் பேச இலாயக்கற்றவர் என்பதைப் பக்தவச்சலம் உறுதி செய்கிறார்! வடநாடு தென்னாடு என்று பேசுவதெல்லாம் குறுகிய மனம் படைத்தவர்களின் பிதற்றலாம். பக்தவத்சலத்தின் பரிதாபத்துக்குரிய இந்தப் பேச்சு மக்களின் வரிப்பணத்திலே பிழைத்துக்கொண்டிருக்கும் அவரின் அறியாமையைத்தான் காட்டுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் இவர் விவசாய மந்திரியாக இருந்தார் சுவிட்சர்லாந்து நாட்டுக்குப் போய் அங்கு நடைபெற்ற விவசாயக் கண்காட்சிகளையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுப் பலநாட்களுக்குப்பின் சென்னைக்குத் திரும்பினார். சட்டசபையில் உறுப்பினர்கள் கேட்டார்கள், அவருடைய சுற்றுப்பயணச் செலவுகளைப் பற்றி! அமைச்சர் தனக்குள்ள பொறுப்புகளையெல்லாம் மறந்துவிட்டு "ரெம்பவும் கொஞ்சம்தான்!" என்று துவக்கி ஆயிரக்கணக்கிலே சொல்லிமுடித்தார்! காங்கிரசுக்கட்சி உறுப்பினர்களும்கூட விரும்பிக் கேட்டார்கள், மந்திரியின் சுவிட்சர்லாந்துச் சுற்றுப் பயணத்தினாலே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன நன்மை ஏற்பட்டுள்ளதென்று! "ஒன்றுமில்லை" என்று அவசர அவசரமாக உளறிக் கொட்டிவிட்டுப் புறப்பட்டார்! இனி திரும்பியே வரவேண்டாம் என்று தான் தேர்தலில் தரைக்கு முத்தம் கொடுக்கச் செய்தார்கள்! 1957 தேர்தலில் மந்திரி பதவியை வகித்துக்கொண்டே சிரங்குனிந்து நடந்தார்-சி. வி. எம். அண்ணாமலையின் எதிர்ப்புக்குத் துணைநாடி எவரெவர் காலடியிலோ வீழ்ந்து இறுதியில் தப்பிப் பிழைத்தார்! இவருக்கெல்லாம் இலட்சியம் ஏது?

"திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டித்துப் பேசுவதற்கு, என்னைவிட்டால் வேறு எவருண்டு!" என்பதாக மார்தட்டிக்கொள்பவர் நிதிமந்திரி யெனப்படும் சுப்பிரமணியம். காமராசருக்கு வாயை இரவல் கொடுத்துவிட்டு உலாவுகிறார். இவர் பேசுவதெல்லாம் 'பேச்சா' என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது. இந்தச் சொல்லின் செல்வனுக்குப் பதவிதான் முக்கியம்-கட்சியின் கொள்கை, செயல்முறைகள் இவைகள் எல்லாம் தேவையில்லை. ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்தின் ஆதரவாளராக இருந்தார். இராசகோபலாச்சாரி பசலுல்லாரோடு நோக்கிப் பெட்டி படுக்கையுடன் புறப்பட்டபோது உண்மையில் மானஉணர்ச்சி உள்ளத்தில் இருந்திருந்தால், இவர் கோவையை நோக்கிப் புறப்பட்டிருக்க வேண்டும். அந்தக் குணம் மருந்துக்குக் கூடத் தன்னிடத்தில் இல்லையென்பதைக் காட்டிக்கொள்வதற்காகவே சென்னையின் முதலமைச்சராக வருவதற்குப் படை சேர்த்தார். கட்சித் தலைவர் தேர்தலில் காமராசருடன் போட்டியிட்டார். தோற்கடிக்கப்பட்டார்-வெட்கப்படவில்லை-வேதனையுடன் கோட்டையைவிட்டு வெளியேறினாரா என்றால், அதுவும் இல்லை! பாரதத்தின் பண்பும் இலட்சியத்தின் மாண்பும் தவிர, தனக்குப்பதவி ஆசையில்லையென்றால் மந்திரிசபை நாற்காலிக்குப் போட்டிருந்த பசையை, ஆசையைத் துடைத்துவிட்டு சாதாரண எம். எல் ஏ ஆகப் போய்ச் சட்டமன்றத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கவேண்டும்! இப்படியும் செய்யவில்லை! காமராசர் தன்னை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்வாரா, சேர்த்துக்கொள்ளமாட்டாரா என்ற கவலையிலேயே பிணநடைபோட்டார்! காமராசரின் அமைச்சரவையில், தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்ற சுப்பிரமணியமும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்! "மானங்கெட்ட மந்திரிகள் சொரணை கெட்ட எம். எல். ஏ.க்கள்" என்று நானல்ல-பல ஆண்டுகளுக்கு முன்னாலே "காண்டீபம்" என்ற ஏடு எழுதிக் காட்டியதை இந்தச் சுப்பிரமணியரும் ஒப்புக்கொண்டார். அதைப் போலவே எதிர்பார்த்த முதலமைச்சர் பதவியில் ஏறத் துடித்தபோது எட்டி உதைக்கப்பட்டதை அடுத்த விநாடியே மறந்துவிட்டுக் குட்டி மந்திரியாகக் கொலுவீற்றிருந்தார்! இந்தப் பிறவிகளுக்கெல்லாம் பதவியே தவிர கொள்கையும் இலட்சியமும் கட்சிப் பணியும் உழைப்பும் என்றுவது தெரியமுடியுமா?

— 8-ம் பக்கம் —

★★★ சென்னைக்கு ஓர் எட்டு மந்திரிகள். அத்தனை பேரும் ஏட்டுச் சுரைக்காய்கள். தமிழின் குரலை என்றுகிலும் எடுத்து முழக்கினரா? இல்லவே இல்லை! அவர்கள் கற்றதெல்லாம் நேருவுக்கு "ஆமாம்!" போடுவதே! இந்த விந்தையான மந்திரி மந்தைத் தலைவர் காமராசர். மீதி எழுபேரும் அவர் சொன்ன வழியே செல்கின்றனர். அவர்களது சுய உருவங்களை "கூடலரசன்" பேனாவால் காணுங்கள்...

கல்லூரிக் கவியரங்கம்

1. காதல்.

செந்தமிழை நாடோறும் எண்ணியெண்ணிச்
"சிவக்கின்ற நா"வலரால் வளர்ந்து வாழ்ந்து,
வந்தவரால், அயல்மொழியால், சோர்ந்து தாழ்ந்தும்
வளையாத தமிழ்க்கொடியே, வாடாப் பூவே!
சிந்தையெலாம் மணங்கமழ வாழ்த்து கின்றேன்;
சீர்வளர்க்கப் புறப்படுவோர் தொண்டர் தம்மைச்
சந்ததமும் வாழ்த்துகிறேன், வணங்கு கின்றேன்;
சலியாத புலிக்குலத்தைப் போற்று கின்றேன்!

மணிமுடியைத் தீதென்று தள்ளி விட்டு
மங்கையர்தம் காதலினை மதித்துப்போற்றி,
"அணிந்தவரை அழகுசெயும் மகுடம் வேண்டாம்;
ஆருயிரில் இனிக்கின்ற காதலுக்குப்
பிணியாகும் இவை"யென்று தூற்றிவிட்ட
பேரரசர் வரலாற்றை அறிந்திருப்பீர்!
அணிபெறவே உரையேன்நான் அறியேன் என்னை
அன்பர்காள், பிழைநீக்கி ஆதரிப்பீர்!

பாட்டெழுதிப் பழக்காதல் துறையைப் போற்றப்
பணித்திட்ட மன்றத்தார்க்கொன்று சொல்வேன்;
மீட்டுகின்ற யாழிசையைப்பற்றிக் கொஞ்சம்
விளம்பென்று செவிடன்பால் கேட்டுவிட்டீர்!
தீட்டிடநான் மைநிரப்பி எழுதுகோலைத்
திருப்புங்கால் யார்யாரோ மனக்கண் முன்னே
காட்டுகிறார் தம்வடிவை; அதனால் நீவிர்
கலைவல்ல அன்னவர்க்கே செவிசாய்ப் பீரே!

அறிஞன்:—

மாதரெனும் வயல்தந்த 'பொன்' விளைச்சல்;
மணவாழ்வின் இன்பவிதை, காதல் என்பேன்!
மேதினியில் வாழ்வென்னும் பாடலுக்கு
மெட்டமைத்துக் கொடுப்பதுதான் காதல் என்பேன்!
சாதியினால் சமயத்தால் அழியவொண்ணாச்
சரிதந்தான் அன்புதரும் சாகாவாழ்வு;
காதலொரு மென்கயிறும்; அக்கயிற்றிற்
களித்தாடும் பம்பரங்கள் உலக மக்கள்!

எப்பொருளின் வடிவிற்கும் நிழல் கருப்பாம்!
எவ்வண்ணப் பொருளுக்கும் நிழல் கருப்பாம்!
அப்படியே அன்பினிலும் பேதமில்லை;
ஆருயிர்க்கெலாம் பொதுவாம் அன்பு வாழ்க்கை!
இப்புவியில் மெய்க்காதற் பாதைதன்னில்
ஈருடலில் ஒருயிரின் சந்திப்பிற்குள்
எப்படியும் பிரிவில்லை இரண்டுவெள்ளம்
இணைந்திட்டால் முழக்கத்திற் கெல்லை யில்லை!

இளம்பெண்:—

மாற்றுயர்ந்த பசும்பொன்னை மடியில் வைத்து
மறைத்துள்ள மணமகள்போல், காதல் வாழ்வை
நேற்றுவரை மறைவாக ஒளித்தி ருந்தேன்;
நெஞ்சமெனும் பேழையிலே பூட்டி வைத்தேன்!
ஆற்றருகே, குளக்கரையில், தெருவோரத்தில்,
அங்கங்கே அவர்வந்து விழிப்பார்; இன்றோ
ஊற்றெடுத்த எம்காதல் அலைகள் பொங்கி
உள்ளத்தைப் பேரின்ப வெள்ள மாக்கும்!

தைக்கின்ற அத்தானின் கண்கள் பட்டுத்
தலைகவிழ்ந்த படியிருப்பேன், அருகில் வந்து
மெய்க்காதல் மீதூர மேனி தொட்டு
மென்கரத்தைத் தன்முகத்திற் ஆட்டிக் கொள்வார்!
'பொய்க்கோபம்' புரிகின்ற என்னைக் கண்டு
புதுமகிழ்ச்சிக் கண்ணீரில் சிரித்து நிற்பார்!
தைப்பொங்கல் விருந்தாக நான் பூரிப்பேன்;
தனியாத பசியாவார் ஆசை அத்தான்!

காதலன்:—

விண்மீன்கள் தடுமாறும் இரவுப் போதில்
விழிகளிலே விளக்கேற்றிக் காத்திருப்பாள்;
கண்வாசல் வரவேற்கக் கரங்கள் சேரக்
காதலெனும் பூவினிலே தேன் குடித்துப்
பண்பாடிப் பொழுதெல்லாம் மறந்திருப்போம்;
பறவைகளில் அன்றில்போல் ஒன்றி வாழ்வோம்!
எண்ணங்கள் ஒருமித்துக் காதல்ஊறும்
இதயத்தாற் புதுவாழ்வை உதயஞ் செய்வோம்!

கருநாவற் பழம்,நீரில் விழுவதைப்போல்
'களுக்'கென்று முத்தங்கள் கொடுத்து வாங்கித்
திரைவீசும் கடலேபோல் என்றும்காதல்
தேன்கவிதை யிசைபாடி அயர்ந்தபோது,
கருமிகள்தம் காசுபணம் எண்ணி யெண்ணிக்
களிப்பதுபோல் காதலினை எண்ணி யெண்ணிப்
பெருவானக் கூரையின்கீழ் உலகுதந்த
பேரின்ப மடியினிலே உறங்கப் போவோம்!

விதவை:—

வாழ்வென்ற பாலையிலே தோன்று கின்ற
வனப்புமிகும் கானல்தான் காதல் என்போம்!
தாழ்வுற்றோம், இங்கினியும் உடலைத் தாங்கித்
தரணியிலே திரிகின்றோம் அரும்பும் முன்னர்
பாழ்பட்ட மலரானோம்! எமக்குக் காதல்,
பனிக்காலந் தருகின்ற வாடைக் காற்றும்!
சூழ்கின்ற சமுதாயக் கூண்டிற் குள்ளே
சுதந்தரமாம் காதலினைத் தேடுகின் றோம்!

கலையாத ஓவியமாய் உலக வாழ்வைக்
கண்குளிரக் கண்டிடவே கனவு கண்டோம்
புலராமலே பொழுது போயிற்றம்மா!
புவிவாழ்வே கதையென்று புரிந்ததம்மா!
மலர்க்காற்றாய், 'மணம்'வீசும் தென்றல் போலே
மணவாழ்வில் மகிழ்ந்திருந்த காத லின்பம்
அலைநீரில் மணல்வீடாய்க் கரைந்ததம்மா!
அணைகடந்த கண்ணீராய் வளர்ந்ததம்மா!

துறவி:—

மன்மதனின் கலையென்னும் காதலுக்கு
மதிப்பளித்து மதியிழக்கும் மானிடர்காள்!
மின்மினியை விண்மீனாய் எண்ணுகின்றீர்;
மெல்லியலார் இன்பந்தான் இன்பம் என்பீர்!
மன்னவனே யானாலும் ஆவி போனால்
மண்ணகமே அரியணையாம் என்று சொன்னால்
பின்னுகிறீர் காதலெனும் பொய்ப் புராணம்;
பேசுகிறீர், ஏதேதோ பிதற்று கின்றீர்!

— 10-ம் பக்கம் —

★

சென்னைக் கல்லூரிகள் தமிழ் மாணவர் மன்றத் தோழர்கள் 17-2-60 அன்று நம் ஆசிரியர் தலைமையில் ஒரு கவியரங்கம் நடத்தினர். அக்கவியரங்கக் கவிதைகள் இவ்விதழ் முதல் தொடர்ந்து வரும். முதல் கவிதை "கல்லூரிக் கவிஞர்" பட்டம் பெற்ற தோழர் சீனிவாசனின் படையல்.

★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 12-3-'60 | இதழ் 39

தேசாய் நினைத்தாரா, மக்களை ஒரு தூசாய்?

"முயலுக்கு மூன்றே கால்!" எனும் முரட்டுப் பிடிவாதக்காரர் பம்பாய் மொரார்சி. உள்ளூரில் விலைபோகாது, வெளியூருக்கு ஓடிப்போனவர் அவர். "தனக்குப்பின் தன் இடத்தில் இருக்கத் தகுதி படைத்தவர் ஆயிற்றே!" என்ற நினைப்பில் நேருவும் ஏதேதோ செய்கிருர். குதிரை என்று சொல்லி, அல்லாத ஒன்றுக்குக் காசுமீரச் சால்வை போர்த்திக் காட்டினுலும் நம்புவாருண்டோ? மன்ருதிமன்னர்; பொருளியல் வல்லுனர்; ஏழைகளின் தோழர் என்றெல்லாம் புகழப்படுகிருர் மொரார்சிதேசாய். ஆனுல், அவரால் பிறந்த மண்ணுக்கும் புகுந்த மண்ணுக்கும் போன இடத்திற்கும் பயன் இருப்பதாகத் தெரியவில்லை. அவரால் பம்பாய் கண்டது குழப்பமும் அழிவும்தான்; அவர் புகுந்ததனுல் தில்லி ஒன்றும் வாழ்ந்துவிடவில்லை; போன அமெரிக்காவிலும் அவர் தன் நாவைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை. ஆக, மொரார்சி இருந்த இடமெல்லாம் அமைதி சரிந்த அவலம் தான் தலைதூக்கி ஆடுகிறது. இவ்வளவு பெருமைகளுக்கும் உரிய அந்தப் பெரிய மனிதர்தான் இப்போது தன் வாயால் இரண்டாம் முறையாக வரவு - செலவுத் திட்டம் வாசித்திருக்கிருர். வழக்கம்போன்றே காங்கிரசார் அதற்கு வாழ்த்து மழை பொழிந்திருக்கின்றனராம். பொழியட்டும்; பொழியட்டும்! அதற்காக மக்கள் வயிறு எப்படியும் கிழியட்டும் என்று விட்டுவிடமாட்டோம் நாம்! வாழ்வு குலைந் தாலும், வண்ணம் கலைந்தாலும் கவலைப்படுகின்ருேம் நாம், இந்நாட்டு மக்களுக் காக. மக்களும் நம்மையே நம்பியிருக்கின்றனர். அதனுல்தான் மொரார்சி தேசாயின் கொடுமை நிறைந்த போக்கைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிருேம், நாம். "புதிய வரிகள் ஒன்றும் ஏழையர்மீது விதிக்கவில்லை!" என்று பெருமைப் பறையறைகின்றனர் ஆளவந்தார். புலி தன்மீது பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு வந்தாலும், அதன் கால்கள் காட்டிக்கொடுத்துவிட்டன. காங்கிரசார் ஏழையரைப் பாதிக்கும் வரி ஏதும் போடப்படவில்லை என்று சொன்னுலும். சராசரி அறிவுள்ளவனும் வரிக்கொடுமைகள் வரும் விதத்தை, வளர்க்கப்பட்டிருக்கின்ற வகையை அறிந்துகொண்டான்.

வரி விதிப்பில் இவர்கள் கையாளும் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் நம் கண்ணுக்குத் தப்பமுடியாதன. கடந்த கிழமை இரயில்வே வரவு - செலவுத் திட்டம் பற்றித் தெளிவாக விளக்கியிருந்தோம். "இந்துத்தான் டைம்சு" என்ற ஏடு எழுதியதுபோல "அரசாங்கம் வரி விதிப்பிற்குரியன எவை என்றும், விதித்தற்குக்கூடாதன எவை என்றும்கூட அறிந்துகொள்ளவில்லை. உப்புக்குக் கூட வரி விதிக்கும் இவ்வரசாங்கம் அச்செயல்களைக் கூசாமல், நடுங்காமல் செய்கிறது!"

மக்கள்மீது நேரடியாக வரி விதித்தல் ஒருமுறை. மறைமுகமாக வரி விதித்தல், தீயோர்க்குக் கிடைத்த மற்ருெரு முறை. இரண்டாம் வழியைக் கடைப் பிடிக்கும் இவ்வரசினர், ஏழையரின் போக்குவரத்து வசதிகள்மீதும் வரி விதித் திருக்கின்றனர். இறக்குமதியாகும் கார்கள் ஒவ்வொன்றின்மீதும் 1000 ரு. வரி விதிக்கப்போன்றனராம். 10000 ரு. கூட விதிக்கட்டும். கவலையில்லை! சைக்கிள் வரியை உயர்த்தியிருக்கின்றனரே! அது ஏழையர் அரசின் செயலா?

30 கோடி வருமானம் வருமென்று பட்டுத்துணிமீது வேறு வரி விதிக்கின்றன ராம். போகட்டும்; கவலையில்லை! ஆனுல் எளியோர் வாகனத்தின்மீது கைவைக்கத் துணிந்திருக்கிருரே, அதை எப்படி ஏற்பது?

அடுத்து, மக்களிடமிருந்து மறைமுக வரியாகப் பிடுங்குவதற்குப் பதிலாக, "லாட்டரிச்சீட்டு" முறையிலும் பிடுங்க முனைகின்றனர். "காலணு போட்டால் நாலணு கிடைக்கும்!" என்று நடைபாதையில் கூவுகின்ற மோசடிக்காரனுக்கும், "தேசியச் சேமிப்புச்சீட்டு வாங்கிடுவீர்; ஒன்றுக்குப் பத்தாய்ப் பெற்றிடுவீர்!" என்கின்ற அரசினருக்கும் வேறுபாடு என்ன? "இலாட்டரி", சூதாட்ட முறை யாகும்; கொடியதாகும் என்று இதே அரசினர் அதைத் தடை செய்திருக் கின்றனர்! என்ருலும் அதே அரசினர் தேசியச் சேமிப்பு என்ற புதிய பெயரில் அந்தப் பழைய சூதாட்டத்தை நடத்த முனைவதேன்? பணம் சேர்க்கவே இந்த வழி என்கின்றனர். அரசு ஒழுங்காக இயங்கப் பணம் தேவை என்ருலும், இந்த வழியில் அப்பணம் திரட்டப்படுவதை, நாம் கண்டிக்கிருேம்!

அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்கு இன்னும் பல வழிகள் உண்டு. ஊழல்களைத் தடுப்பதன்மூலம் வீண்செலவுகள் நிறுத்தப்பட்டுப் பணம் மிச்ச மாகும் என்பதறிந்ததே. இரண்டாவதாக வரி செலுத்தாதிருக்கின்ற பெரும் பணக்காரர்கள் நம் கண்ணிலும் படுகின்றனர். இவர்கள் கள்ளக் கணக்கெழுது வதன்மூலம் ஏமாற்றும் தொகை வேறு. மீதிக்கணக்குக்கு உள்ள வரிப்பணத்தையும் ஒழுங்காகக் கட்டுவதில்லை. "வழக்காடுகிருேம்." என்ற பெயரில் பணங்கட்டாமல் காலத்தைக் கடத்திவருகின்றனர். இறுதியில் கட்டும்போதும் அற்பத்தொகை களைக் கட்டுகின்றனர் அரசினர். இவர்களைக் கண்டு அஞ்சுவானேன்? நேர்மை யும் திறமும் உள்ள அரசினரானுல் இவர்களை உடன் நெருக்கிப் பணத்தைத் திரட்டலாமே! பல முதலாளிகள்-குறிப்பாக ஆலை முதலாளிகள் இன்னும் வரிப் பாக்கி செலுத்தவில்லை என்று பாராளும் மன்றத்திலேயே சொல்லப்பட்டிருக் கிறது. இதே முதலாளிகளிடம் காங்கிரசார் தேர்தல் நிதி கேட்டலைவதால்தானே, சட்டப்படி உள்ள நடவடிக்கைகளைக்கூட எடுக்க முடியவில்லை! எனவேதான் தாம் தூய மனத்துடன் இருந்தால், அரசினர் நடுங்கவேண்டியதில்லை; மொரார்சி ஒப்பாரி வைக்கவும் வேண்டியதில்லை!

மேலும் அரசின் வருமானத்தில் ஒவ்வொரு காசும் சிந்தித்துச் செலவழிக் கப்பட வேண்டியனவாய் உள்ளன. வெளிநாட்டுச் செலாவணி கண்டிப்புடன் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. ஆனுல், தேசாயின் அரசு வெளிநாட்டு உதவியை வீணுக்குகிறது. இந்த நாட்டு ஏழை மகனுக்குத் தேவை கருவிகளும் பொறிகளுமா? சோப்பும் சீப்புமா? உணவும் மருந்துமா? வாசனைத்தைலமும் சுனே புட்டிகளுமா? ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியைத் தடுத்தால் வெளிநாட்டுச் செலாவணி பயனுள்ளதாகுமில்லையா? அமைச்சர் ஏன் அதை உணரவில்லை? அதுபற்றி ஏன் குறிப்பிடவில்லை? பட்டுத்துணிக்கு வரி உயர்த்திய அமைச்சர், இவற்றைத் தடைசெய்ய முயலாதது, ஏன்? இந்த நேரத்திலே வெளிநாட்டு மது வகைகள் இங்கே அதிகம் இருக்குமதியாவதையும் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. வடநாட்டு ஆங்கில ஏடு ஒன்று குறிப்பிட் டிருந்தது, ஒரிசா மாநிலத்தில் வெளிநாட்டு மது வகைகளின் இறக்குமதி பெருத்திருப்பதாக. இலட்சக் கணக்கான ரூபாய் இதனுல் இழப்பாகிறது, காந்தியார் வழிவந்தோர் ஆளும் அரசுக்கு. இதையும் தேசாய் அவர்கள் கவனித்தாரா? அல்லது ஒரு தூசாய்க் கருதினுரா?

வள்ளுவன் சொன்னுன், வரவையும் செலவையும் அறிந்து அளந்து வைத்துச் செயல்களை மேற்கொள்ள வேண்டுமென. மக்கள் துன்பமடையாத வகையில் வரியை ஈட்டுவதும், அவற்றைச் செலவழிக்க வேண்டிய வழிகளை முறையாக வகுத்தலும் அரசின் கடமைகள் என்ருன். ஆனுல் தில்லியில் அரசு நடாத்தும் அமைச்சர்கள் இருப்பதாகத் தெரியவில்லை; வரி வரி என்று கொத்திப் பிடுங்கும் கழுகுகளே இருப்பதாக அறிகிருேம். அந்தக் கழுகுகளின் தலைமையை தேசாயின் உருவம் அலங்கரிக்கிறது. நமக்கு நம்பிக்கையில்லை, இவர்கள் நல்வழி திரும்புவர் என. நமக்குச் சினத்தை அடக்கிக்கொள்ளவும் முடியவில்லை, இவர்கள் மனிதர்களாவார்கள் என்றெண்ணி! எனவேதான் கேட்கிருேம்: "காற்றையும் காசாய் ஆக்கத் துடிக்கும் இந்தத் தேசாய் நினைத்தாரா, மக்களை ஒரு தூசாய்?"

தென்றல் அளிக்கும்
போட்டிப் பரிசு
ரூ 500
விரிவான அறிக்கை
அடுத்த இதழில்

வானொலியில்...

கழுதையின் குரல் குயிலின் பாடலாம்! தென்னவர் பண்கள் கலையின் புண்களாம்! செவிட்டுக் காதினரின் குருட்டுத் தீர்ப்புக்கள்!

உலக நாடுகளில் இன்று மக்கள் மக்கள் தங்களது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வானொலியை நம்பி வருகின்றனர். அரசியலாரின் அறிவிப்புக்கள் நீங்கலாகப் பெரும் பகுதி இன்பியலுக்கென்றும், விஞ்ஞான விளக்கங்களை அறிவுறுத்துவதற்கென்றும் இயக்கப்பட்டு வருகிறது. வானொலியின் நல்ல நிருவாகத்தினால் நாட்டின் சமுதாயக் கேடுகளை ஒழிக்கவும், உயர்ந்த பண்புகளை வளர்க்கவும் முடியும் என்பது வெளிப்படை. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வானொலிப் பெட்டியில்லாத வீடே பெரும்பாலும் இல்லை என்ற அளவிற்கு அதன் முக்கியத்துவம் உணரப்பட்டிருக்கிறது. காரணம், அங்குள்ள நிலையங்கள் சனநாயகப் பண்புகளை நடுநிலையாகக் கொண்டு செயலாற்றி வருகின்றன என்பதே ஆகும்.

இந்நாட்டில் வானொலி மத்திய அரசாங்கத்தின் நேரடி அதிகாரத்திலிருந்து வருகிறது. மாநில அரசுகளுக்கு அவற்றைக் கட்டுப்படுத்தும் உரிமை கிடையாது. அலுவலர்கள் பொறுக்குவது, வரிப் பணம் பெறுவது, இயக்குவது எல்லாம் மத்திய ஆட்சியின கண்காணிப்பிலேதான் உள்ளன. சில யோசனைகளை எழுதிக் கேட்டுத் தான்

விழலுக்கிறைத்த நீரா நாம் செலுத்தும் வானொலிக் கட்டணம்?

மாநில ஆட்சிகள் வானொலி நிகழ்ச்சிகளில் குறிப்பிட்ட காலத்திற்குச் சில மாற்றங்களைச் செய்துகொள்ளலாம். வானொலிக்கென்று மத்ய ஆட்சி ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்களை ஒதுக்கி மக்களுக்குத் தொண்டாற்றுவதாக ஒரு மரபு இருந்து வருகிறது. மாநிலங்களின் தேவைகளை அறிந்து அப்பணம் செலவழிக்கப்படுவதில்லை. மாநில அமைச்சர்கள் இதுபற்றி எந்தப் பொறுப்பையும் அவசியம் என்று கருதுவதற்கான அனுமானம்கூடத் தெரியவில்லை. வானொலியில் நடைபெற்றுவரும் நிருவாக ஊழலை எடுத்துச் சொன்னால், ஒரு அகராதிபோல் தனியொரு புத்தகமே எழுத இயலும். அலுவலர்களுக்கு ஊதியமாய்க் கொடுக்கப்படும் பணமோ உபகாரச்சம்பளம் அல்லது நன்கொடை என்ற பெயரில் குறிப்பிட்டால்தான் பொருத்தமாயிருக்கும். சிரமம் அதிகம் இல்லாமல் செய்யும் இவர்களது வேலைக்குச் சம்பளம் இருநூறு, முந்நூறு, ஆயிரம், இரண்டாயிரம என்று வாரி வழங்கப்படுகிறது. நடைபெறுகிற வேலை, செலவினமே அன்றி வருமானத்திற்குரியதல்ல. வானொலிக் கட்டணம் அதன் செலவினத்திற்கு ஈடாகாது என்பது தெளிவு.

ஆயினும் மக்களது நலனுக்கோ, இன்பியலுக்கோ, நல்லதோர் சிந்தனை வளர்ச்சிக்கோ பயன்படுமாறு அதன் நிகழ்ச்சிநிரல் அமையவில்லை. காலை ஏழு மணிக்குத் தொடங்கி எட்டரை மணிக்குள் ஒரு பகுதியை முடித்துவிட்டுப் பிற்பகல் பன்னிரண்டரை மணிக்குத்தான் இரண்டாவது பகுதியைத் தொடங்குகிறார்கள். மாலை ஐந்து மணிக்குத் தொடங்கி இரவு பத்து அல்லது பதினொன்று வரை நீடிக்கிறார்கள். காலைநேரத்தில் இருக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் இன்னும் சற்று ஒருமணி நேரம் நீட்டித்து வைக்கலாம். அலுவலகம் செல்பவர்கள், பள்ளிக்குச் செல்லுபவர்கள் எல்லாம் ஒன்பது மணிவரை அவரவர்கள் சற்று மலர்ச்சியோடும் ஓய்வோடும் இருப்பார்கள். காலையில் தொடங்கும் இறைவாழ்த்து அல்லது செயல் தொடக்கம் என்னும் பகுதியை ''ஸ்வாகதம்'' என்று அழைக்கிறார்கள். யாருக்குத் தெரியும் ஸ்வாகதம் என்பது பற்றி? கீதமஞ்சரி, சூரியகாந்தி என்றெல்லாம் வேறுபல பொருந்தாத் தலைப்புக்களில் சில வேடிக்கைகள் நடைபெறுகின்றன.

காலையில் அனைத்திந்திய அரசாங்கத்தின் செய்தி அறிக்கை முடிவடைந்ததும் சில இசைத் தட்டுகளை வைக்கிறார்கள். யார் பாடியவை? என்றோ முப்பது வருடங்களுக்கு முன்னால் இருந்த நாலரைக் கட்டை எஸ். ஜி. கிட்டப்பா, வி. ஏ. செல்லப்பா, எஸ் வி. சுப்பையா பாகவதர், எஸ். டி. சுப்பையா பாகவதர், கல்லிடைக்குறிச்சி மொய்தீன், அஸ்வத்தம்மா போன்றவர்களின் பாடல்களை வைக்கிறார்கள். சுவைக்கப்பட வேண்டிய இசை நயம் உள்ளவர்கள்தான் இவர்கள். என்றாலும் இசைத் தட்டுக்களின் பழைமை அவ்வினிமையைச் சகிப்புத் தன்மை அற்ற நிலைக்கு மாற்றிவிடுகின்றன என்பதை அறிய வேண்டும். சிறப்பாயிருந்த பழங் கவிஞர்களின் ஆற்றலைப்பற்றிய அறிமுகம் ஓரளவு நல்லதுதான். ஆனால் அவற்றையே நிரந்தரமாய்க் கொண்டு நாள்தோறும் உற்சாகத்தைக் குறைப்பது என்பது பொருளற்ற வேலையாகும். இன்று நம்மிடையேயுள்ள புதுமைக் கலைஞர்களின் எழுச்சிக்கும், விரிவான வளர்ச்சிக்கும் நன்கு பயன்படாமல் ஏதோ கடன் கழிப்பதாய்க் குறித்த நேரத்தை ஓட்டிவிட முயலுவது மக்கள் பணத்தைப் பக்குவமாய்ச் செலவழிக்காத பொறுப்பற்ற தன்மையைத்தான் குறிப்பதாகும்.

மற்றும் கலைஞர்களுக்கு வாய்ப்புத் தரும் நெறியில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என்று தரம் பிரித்திருக்கிறார்கள். நேரம், வாய்ப்பு, பயணப்படி எல்லாம் அதற்கேற்றவாறு பிரிக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்பில் யார் இருப்பார்கள்? சொல்லாமலே தெரிந்திருக்கும். குறிப்பிட்ட சிலரான முசிரி, செம்பை, செம்மங்குடி, அரியக்குடி, மணக்கால், ஆலத்தூர், துறையூர், எம். எல். வி., எம். எஸ்., ஜி. என். பி, வி. வி. எஸ்., என்பவர்களை தவிர நன்கு புலமைபெற்ற புதிய வேறு பலரைக காணமுடியவில்லை. இசைத்துறையில் நல்ல சாரீரம், இலட்சண சங்கீதம், இலட்சிய சங்கீதம், கீர்த்தனைகள் என்பவற்றையும் நன்கு பாடும் பல தமிழ்ப் பெரும் பாவாணர்களுக்கு அறவே வாய்ப்பில்லை. இவர்களைத் தேர்ந்தெடுத்துச் சிபார்சு செய்யும் அக்குழுவில் திறனைக் காட்டினால் அரசியல் நிறங்களைக் கற்பித்து ஒதுக்கிவிடச் சதி செய்கிறார்கள். சிலருடைய தனித்த ஏகபோக உரிமைக்கான வேட்டைக்காடாக வானொலி மாறிவிட்டது என்று சொன்னாலும் தவறில்லை. ஏன்? பொருளாதார வாய்ப்புக்கூடமாக மாறிவிட்டது என்றும் சொல்லலாம்.

புதிதாய் உருவாகிவரும் நிலைகளுக்குத் தகுந்தவாறு தங்களை வளர்த்து வரும் இலட்சியக் கலைஞர்களை வளரவிடாது தடுத்துவிட முயற்சி செய்து முளையிலேயே கிள்ளியெறியத் திட்டமிடுகிறார்கள். பழந்தமிழ் இசையில் இருந்த பண்களை ஆய்ந்து மறைந்த அறிஞர் விபுலானந்த அடிகளாரும், இலக்குமணப்பிள்ளை போன்றோரும் நிறைய ஆதாரங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதன்படித் தொல்காப்பியம், மற்றும்பல நூல்களின் துணைக்கொண்டு தமிழ் இசையைத் தொட்டும் உயர்ந்த தரத்தையும் திறனையுங் காட்டினாலும் அவற்றை எல்லாம் ''Un improved Music'' என்று சொல்லி அக்கலைஞர்களை ஒதுக்கிவிடுகிறார்கள். முன்னேற்றமில்லாத இசையாம். எது? எந்தக் கலைஞர்களைக் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகப் பாராட்டிப் பயன்படுத்திபதோ, அவர்களையே பார்த்துத் தனித்தமிழ் உணர்ச்சிக் காட்டும்பொழுது இன்று இந்தக்குறையைச் சொல்லுகிறார்கள். மேலும் தென்னாட்டிலுள்ள வானொலி நிலையங்களின் இயக்குனர்களாக அசாம், பஞ்சாப் பகுதிகளைச் சேர்ந்த அலுவலர்களை அனுப்பி வைக்கிறார்கள். நிருவாக முறை எவ்வளவு நியாயப் புறம்பாக, செல்லுகின்றதென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பேச்சுகளுக்கு ஏற்பாடு செய்யும்பொழுதும் இப்படியே பல நல்ல கருத்துக்களைத் துண்டித்துவிடுகிறார்கள். பேசுவோரின் எண்ணத்திற்கு அடித்தளம் எதுவோ, அதைப் பாதிக்கும்படி செய்து வருகிறார்கள். எங்கே மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லிவிடப் போகிறார்களோ என்று நினைத்து ஆராய்ச்சி அறிவற்றவர்கள், மிகமிகச் சாதாரணமானவர்களையெல்லாம் போட்டு நிரப்பி ஏதோ காலங் கடத்தி வருகிறார்கள். ''இதுதான் முறையா? சனநாயகமா? பண்புள்ள கலைத் தொண்டா?'' என்பதை எண்ணிப் பார்க்க நமது மாநில அமைச்சர்களுக்கோ நேரமில்லை. எடுத்துச் சொன்னாலும் துடுக்குத்தனம் என்பார்கள். இதனால் இன்று வானொலிப் பெட்டி வைத்திருப்பவர்கள் எல்லாம் இலங்கையின் மீது கவனத்தைத் திருப்புகிறார்கள். கட்சிப்பிரிவினை என்ற எண்ணம் இல்லாது, கருத்துக் கலைச்சுவை, உவகை என்ற தன்மைகளுக்காகப் பலரையும் ஊக்குவிக்கின்றனர். பல நடிகர், நடிகையரின் பேட்டிகள், விமரிசனங்கள் என்றும் ஏற்பாடுசெய்கிறார்கள். வணிகத்திற்குப் பயன்படும் முறையில் தங்களது வருவாயையும் பெருக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அதன் மீதும் நமது மத்திய அரசின் வானொலித்துறை தனது கண்டனத்தைக் கடந்த ஆண்டில் தெரிவித்தது. இடைவிடாமல் இசைத் தட்டுக்களை வைத்து இந்தியாவின் வானொலி நிருவாகக் கருத்துக்கு இடையூறு விளைவிப்பதல்லாமல், உள நாட்டின் வானொலி நிகழ்ச்சிகளுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த சுவையும் பாதிக்கப்படுவதாகக் குறை சொல்லப்பட்டது. எனினும் இலங்கை வானொலியின் வணிகத்துறை இதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இங்கேயுள்ள மக்களின் ஆவலையும், வளர்ந்துவரும் மறுமலர்ச்சி எண்ணங்களையும் மூடி மறைக்கத் திட்டமிட்டு விட்டு மற்றொரு நாட்டின் மீதும் காய்ந்து விழுவதென்றால் எவ்வளவு குமுறல், எரிச்சல் மனதிற்குள் இருக்கிறதென்பதை யாரும் இதிலிருந்து தெரிந்துகொள்வார்கள்.

இந்த நிலையில் வானொலி நிருவாகத்தைத் தனித்துறையாக விரைவில் மாற்றிவிட முடிவு செய்திருக்கிறார்கள். இன்சூரன்சு நிருவாகத்தைப்போலவும், நெய்வேலி நிலக்கரி எடுப்பு நிருவாகத்தைப் போலவும் அமைப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். நடைமுறை விதிகளைத் தனக்குத் தானே வகுத்துக்கொண்டு இறுதியாகப் பாராளு மன்றின் எண்ணங்களுக்குட்பட்டதாக இனி அது இருக்கும். அதாவது இந்திய அரசாங்கத்தின் கீழிருக்கும் என்ற தன்மை குறைந்து, தனித்தும் ஆனால் ஒத்தும் இயங்கும் நிறுவனமாக மாற்றப்படவிருக்கிறது. தனியார் துறையாக அமெரிக்காவில் வானொலி நிலையங்கள் இநக்கின்றன. இரயில்வேக்களும் உள்ளன. அரசாங்கத் தேவைகளைப் முழுவதுமாய் நிறைவேற்றிவிட்டு எஞ்சியவற்றை முழுவதும் அத்துறையினரின் சொந்த முடிவுப்படி நடத்திவருவது அங்குள்ள முறை. பி. பி. சி. எனப்படும் நிருவாகம்போல் இந்தியாவில் அமைக்கவேண்டும் என்ற நினைப்பில் தான் இதையும 'கார்ப்பரேசனாக' (தனி இயக்கமாக) மாற்றப்போகிறார்களாம். இது நடைமுறைத் தொண்டில் நன்றன்று.

வானொலியின் நோக்கமும் ஆக்கமும் உறுதிப் பயன்களைக் கொடுக்க வேண்டும் என்றால் அதை மாநில ஆட்சியின் பொறுப்பில் ஆங்காங்கு விட்டுவிட வேண்டும். சில அவசியமான அலுவல்களைமட்டும் தனக்கென மத்திய அரசாங்கம் சிறுத்து வைத்துககொண்டு எல்லா அதிகாரங்களையும் மாநிலமே அனுபவிக்க வசதியிருக்க வேண்டும். அந்தந்தப் பகுதிக்கென்றே வானொலி நிலையங்கள் அமைக்கப்படுவதால் இதில் இந்திய அரசாங்கத்தின் நேரடி நிருவாகம் அர்த்தமற்றது. இதைப் போர்க் காலங்களில் வேண்டுமானால் கட்டுப்படுத்துவது முறையாக இருக்கலாமேயன்றி, அமைதிக் காலங்களிலும் அன்றாடம் தலையிடுவது முறையாகாது. மாறாக மாநில மக்களின் ஒவ்வொரு உரிமையும் பறிக்கப்படுவதான எண்ணத்தைத் தான் அது நாளுக்கு நாள் வலுப்படுத்தும். உள்நாட்டுத் தேவைகளை மாநில ஆட்சிதான் நன்கு தெரிந்திருக்கமுடியும். காவல் துறையும், கல்வித் துறையும் இருப்பதுபோல் மாநில அதிகாரத்திற்குள் வானொலியும் சேர்க்கப்பட வேண்டும். மாநிலங்களின் கலையும், இலக்கியமும், இசையும் இன்ன பிறவும் வளர வேண்டிய சூழ்நிலைகளை வானொலி நன்கு இணைத்துக் கொடுக்கும் வசதியான நிலை ஏற்பட்டாலொழிய, வானொலிக் கட்டணம் விழலுக்கிறைத்த நீரேயாகும்.

—வே. சௌந்தரராசன்.

அண்ணா உலா

★

மூடி மன்னன் உலாவந்தால் முத்து வைத்த
முழுநிலவும் குடைவிரியும், குதிரை, யானை,
கொடிபறக்கும்; நன்நெடுந்தேர், எல்லாம் வெற்றிக்
கொற்றவனைச் சூழ்ந்துவரும் முரசு கொட்டும்!
இடை ஒடிக்கும் ஏழ்பருவப் பெண்கள் வீதி
இருபுறமும் குவிந்திருப்பர்; தமது நெஞ்சம்
தடந்தோளன் மன்னன்மேல் தாவிக் கொள்ளத்
தவிப்படைவர்: தம்நிலையை மறப்பர்; நிற்பர்!

இவ்வகையில் பழம்புலவர் கலிவெண் பாவில்
இயற்றிவைத்தார் உலாவெனும்நல்
இலக்கியத்தை
ஒவ்வாதே இக்காலப் போக்கிற் கென்றே
ஒதுக்கிவிட்டே அவர் நெறியை உணர்ந்து
பார்த்தேன்!
செவ்வானத் தணல்உருக்கில் நீந்திப் பாய்ந்தேன்
சிலிர்சிலிர்த்தேன்; அண்ணாவை அங்கே
பார்த்தேன்!
எவ்வாறோ என் இதயக் கட்டுக்குள்ளே
எழிலாக உலாவந்தார்; எனையாட்கொண்டார்!

நெஞ்சமெல்லாம் பரபரப்பு; கொந்தளிப்பு;
நெடுவான ஒளிவிரிப்பு; கனலின் வார்ப்பு.
கொஞ்சமன்று; நஞ்சமன்று; கொள்ளை கொள்ளை.
குதித்தெழுந்த எண்ணங்கள், கோபுரங்கள்!
மஞ்சடைந்த வானத்தைக் கிழித்துச் சாடும்
மழைமின்னல் நினைவெல்லாம் சூழ்ந்து வீச
அஞ்சுகத்தின் வாயமுதைக் குழைத்துச் சேர்த்துக்
கொஞ்சவரும் சொற்கூட்டம் கோடி; கோடி!

கடற்கரையில் சென்றமர்ந்தேன், கனவு கண்டேன்!
கார்வானத் தொப்பியின்கீழ் கவலை யற்றுக்
கிடக்கின்ற கிழட்டுவகைப் பார்த்தேன்! அங்கே
கதிர்விரிப்பு
போல் ஒருவன் காட்சி தந்தே
தொடவந்து மணற்கரையைத் தோள்உடைந்து
தோல்வியொடு திரும்புகின்ற அலை,பார் தம்பி!
நடந்ததில்லை இச்சிறுமை திராவிடத்தில்
நடப்பதுண்டோ இனிமேலும் என்றால் இல்லை!

ஒடுங்கிவிட்ட என்தாயின் மக்களெல்லாம்
ஓங்காரம் பெற்றுவிட்டார் ஒருநாளைக்கே
நடுங்க வைப்பார் இனப்பகையை வடக்கர் தம்மை!
நாடெங்கும் பெரும்புகழை எழுப்பி வைப்பார்!
படுந்துயரம் மறையும்நாள் இந்நாளேகாண்!
படைகிளம்பிவிட்டாலப் பகைஎன் செய்யும்?
கொடுங்கோலா? வேரறுப்போம் எழுவாய் தம்பி
கொற்றவர்நாம் மற்றவர்க்கிங்
கென்றுரைத்தான்!

அவ்வீரன் தான்நமது அண்ணன்! நாட்டின்
அடலேறு, செந்தமிழன் இன்பப் பேறு!
ஒவ்வாது பழங்கருத்துக்குப்பை! இன்றே
ஒடித்தெறிவோம் மதத்திமிரை! நம்மைவந்து
கவ்வியுள்ள வடக்கிருட்டின் கட்டறுப்போம்
கட்டிளைஞீர் கொதித்தெழுவீர்! எழுவீர்! வாரீர்
எவ்வாறு நமை அடக்க வல்லார் பார்ப்போம்?
எதிர்த்திடுவோம் எனவெழுந்த சிங்கப் பாய்ச்சல்!

கல்தோன்றி மண்தோன்றாக்காலப், ஞாலம்
கைக்குழந்தை யாயிருந்த நேரம், மண்ணில்
சொல்வளர்த்து மொழிவளர்த்தும் பண்பைக்காத்துச்
செழித்திருந்தார் திராவிடத்தார்;
பிழைத்திருந்தார்!
புல்லெடுத்த ஓரினத்தார் புன்மை செய்ய,
புதையுண்ட திராவிடத்தைப் புதுக்கி வைக்க
சொல்லெடுத்தார்; குரல்கொடுத்தார்; அறிஞர்
சுமைகுறைத்தார்; திராவிடத்தின்
பெருமைகாத்தார்!

விண்கிழிக்கும் மறம்செறிந்த வீரர் கூட்டம்,
வேறெங்கும் கிடைக்காத தமிழர் கூட்டம்!
மண்கிழிக்கும் ஆற்றொழுக்காய்க் கண்ணீர் விட்டே
மனம்நொந்து துவள்கின்ற நிலையைப் பார்த்தார்!
வெண்தாடி வைத்திருக்கும் பெரியார், நாடு
வெங்காட்டில் வேகுவதோ எனவெகுண்டார்!
கண்என்றார் நீஎனக்கு நமதண்ணாவை!
கையிணைப்போம் வாவென்றார்; கழகம் வைத்தார்!

எழுந்ததொரு செழுஞ்சோதி! திக்கிலெங்கும்
எந்நாடும் கண்டறியா ஒளியின் வீக்கம்!
அழிந்துவிட்ட தமிழ்ச்சாதி ஆ! ஆ!! வென்றே
ஆர்த்தெழுந்து தனைஉணர்ந்து, நிமிர்ந்து, நிற்க
புழு அல்ல; தமிழா நீ! புலி! என்றே ஓர்
பொய்யாத உரைசொன்னார் அண்ணா! பொய்மை
அழுக்கடைந்த வரலாற்றைக் கழுவி விட்டார்.
அறிஞரென்று பலரேத்தப் புகழைத் தொட்டார்!

'அவர்' மறந்தார் திராவிடத்தை என்றாலும் நம்
அண்ணாவோ மறக்கவில்லை; மறைக்க வில்லை!
எவர் என்ன சொன்னாலும்; தூற்றினாலும்
எதிர்வந்து தடுத்தாலும் எதிர்த்திட்டாலும்
சுவர்வைத்துத் தாளாக வேண்டும்! நாட்டைச்
சுளையாகப் பிரிக்கத்தான் வேண்டும் இன்றே!
கவைக்குதவா பேச்செதுவும் வேண்டோம்! எங்கள்
கடமைஇது என்றுரைப்பார்; கலங்க மாட்டார்!

பலகலையின் ஓருருவம்; பண்டு தொட்டுப்
பைந்தமிழர் எதிர்பார்த்த காதல் மைந்தர்
நலங்கொழிக்கும் எழுத்தாளர்; நடிகர், வெல்லும்
நாவன்மையால் தனித்து நிற்கும் செல்வர்!
நலுங்காமல் அலுங்காமல் பதவி வேண்டி
நாய்போல அலைகின்ற மனிதர் நெஞ்சை
உலுக்குகின்ற உயிர்மனிதர் ஊரும் நாடும்,
உயர்வதற்கே எந்நாளும் உழைக்கும் வீரர்!

வெறும் அடுக்குப் பேச்சென்ன சோறு போடும்?
வேலையில்லை அவர்கட்கு வேறே என்று
சிறுமனிதர் சிலர்சொல்வர்! மொழியைப் பற்றிச்
சிந்திக்கும் ஆற்றலிலா வடவர் சொல்வர்!
நறுங்கவிதைப் பேச்சுக்குள் நமது அண்ணா
நாட்டுணர்வை, மொழிப்பற்றைப் பிண்ணி
வைக்கும்
திறமறியார் அவரொன்றும் அறியார்! பாவம்!!
தண்டுமுட்டும் தவளை வேறென்ன சொல்லும்?

மலையிருந்தே இறங்குவதை 'அருவி' என்பேன்!
மைவானச் சுரங்கனையோ மழையே என்பேன்!
அலைப்பாட்டை வீணைதரும் 'ஒலியே' என்பேன்!
ஆடுகின்ற பூங்கொம்பை 'மகளே' என்பேன்!
விலைமதியா மழலையினை 'தேனே' என்பேன்!
வெண்ணிலவை 'எனைமயக்கும் அழகே!'
என்பேன்!
வலைப்பட்டேன் மயங்கிவிட்டேன் அண்ணா பேச்சில்
வாய்திறந்தே என்னவென்றே அதைநான்
சொல்வேன்!

★★★ அண்மையில் குடந்தையில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட தி. மா. மு. கழக முதல் மாநாட்டின்கண் அரங்கேற்றப்பட்டது இக்கவிதையுலா. இயற்றியவர் **வல்லம் இரா. வேங்கடபதி.**

முப்பழமா? முத்தமிழா? மூன்று பாலா?
மூவேந்தர் செங்கோலா? முதிர்ந்த கல்வி
ஒப்பனையா? ஓவியமா? உணர்ச்சிப்பாட்டா?
ஓடோடி அலைசுட்டிப் பாய்ந்து சென்று
தெப்பவிழா பூநடத்த மகிழும் ஆறா?
தெருவெல்லாம் பாலாறு பெருகிப் பாய
செப்படிகள் காட்டுகின்ற நிலவுக் கூத்தா?
செவ்வாழைத் தேனினிப்பா? செந்நெற் காடா?

கப்பியுள்ள மையிருட்டு வான வீட்டின்
கடைதிறப்பா? மின்விளக்கா? பன்னீர் வீச்சா?
கப்பல்வந்து இறக்கிவைத்தப் புதுச்சரக்கா?
கனிபிளக்க ஒழுகிவிரும் இனிப்புச் சாறா?
உப்பிட்டோர் உதட்டொளிர் முறுவற் கோடா?
உதயத்துச் செங்கதிரின் எழுச்சி நோக்கா?
ஒப்பவில்லை எதைஒன்றும் எனது நெஞ்சம்!
ஓ! ஓ! ஓ! என்னென்பேன் எதைநான்
சொல்வேன்!

வெஞ்சமர்க்கும் அஞ்சாத வேங்கைப் பாய்ச்சல்
வேல்வீச்சுப் போல்சொற்கள் வேகங் கொண்டு
தஞ்சமென வந்தடையும் கவிதை பாடும்.
தமிழ்த்தரணி செவிமுழுதும் தேனே பாயும்
துஞ்சாத கருத்தாக்கம். துணிவின் நோக்கம்!
துயர்துடைக்கும் திராவிடத்தின் கண்ணீர்
போக்கும்!
எஞ்சாத புகழ்படைத்த அண்ணாவின் முன்
எவர்பேச்சும் தொடைநடுங்கும்; தோற்கும்
விழும்!

சொல்லவல்லார். செயல்வல்லார், சோர்வே இல்லார்
சொத்தைகட்கும் சோடைகட்டும் செத்தேஉள்ளம்
உலர்ந்துவிட்ட கோழைகட்கும் உணர்ச்சி ஊட்டி
உயிர்பெற்றே எழவைக்கும் சித்துக்காரர்!
பலர்போற்றும் பண்பாளர்: பரிவால் நெஞ்சைப்
பறித்துவிட்ட அன்பாளர்: மேன்மையாளர்!
குலப்பெருமை காப்பதிலே வன்மையாளர்!
குன்றெடுக்கும் தம்பியர்க்கோ உண்மையாளர்!

முன்னேற்றப் பாதையினை அமைத்துத் தம்பி
முன்னேறு! முன்னேறு! முன்னோர் நாட்டை
இன்னே நீ உனதாக்கு! இழிவைப் போக்கு!
இசைபெருக்கு! என் தம்பி இசைபெருக்கு!
என்னோடு புறப்படு நீ! எழுச்சி கொள் நீ!
என அழைத்தார் நம்அண்ணா! எழுந்து வாரீர்!
பொன்னான திராவிடத்தைப் புகழின் வித்தைப்
பெறஉழைப்போம்! நாம் உழைப்போம்!
வெற்றிகொள்வோம்!

டி. கே. சீனிவாசன்
அறிவிப்பு.

எனக்கும் "தாய் நாடு" இதழுக்கும் தொடர்பற்றுப் போனதால், எனக்குக் கடிதம் எழுதும் நண்பர்கள். "டி. கே. சீனிவாசன் மே./பா. நடராசன், 25, கிருட்ணப்ப முதலி தெரு, சேப்பாக்கம், சென்னை-5" என்ற முகவரிக்கு எழுதுமாறு வேண்டுகிறேன்.

அன்புள்ள
டி. கே. சீனிவாசன்.

உரு :

இலங்கையின் வரலாறு துலங்கத் தொடங்கிய நாளிலிருந்து இதே குழப்பம்தான். தமிழரை வெட்டி வீழ்த்துவதும் விரட்டி ஒழிப்பதுமே பிறவிக் கடன் என வெறிபிடித்தலைந்தனர் சிங்களவர். ''தமிழர் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரரல்லர். வேளாண்மை செய்து பிழைக்க வந்த அவர்களுக்கா இந்நாட்டில் ஆதிக்கம்?'' என்று சொல்லினர் சிங்களவர். இன்னும் சில சிங்களக்காடையர் தமிழர்களை, ஈழ நாட்டிற்கு அந்நியராஞேர் எனவும், வேளாண்மைக்கு வந்த கூலிகள் எனவும் கேவலமாகப் பேசினர். நன்றி மறந்த செயல் மட்டுமில்லை இது; வரலாறு மறந்த தீச்செயலுமாகும் இது.

தமிழர் இந்தத் தீவுக்கு அந்நியர் என்ருல் சிங்களவரும் அப்படியே. வங்கத்து இளவரசன் விசயன், தனது தந்தையான அரசனை எதிர்த்து உள்நாட்டுக்குழப்பம் விளைவித்தான்! வெகுண்டெழுந்த மன்னன் தனது மகன் விசயனையும் அவனது தோழர்கள் ஏறத்தாழ ஏழுநூறு பேரையும் நாடு கடத்திவிரட்டினுன். வங்கத்தை விட்டுக் கிளம்பிய விசயன் துணைக் கண்டத்துக் கரைகளெங்கும் அலைந்து பார்த்தான். நிற்கவும் இடம் தரவில்லை, கரையோர மக்கள். அதனுல் மேலும் மேலும் தோழர்களுடன் கலத்தைச் செலுத்திவந்த விசயன், இலங்கைக் கரையில் இறங்கினுன். அவன் அங்கிங்கென்று அலைந்து கடைசியாக ஏற்கனவே அங்கு அரசாண்டிருந்த யக்கஇனத்து அரசியால் கைதியானுன். தன்னைக் குகையில் அடைத்துச் சிறைவைத்த அவளையே பின்னுளில் மணந்தான்; தன் அரசமைத்தான். சிங்கத்தின் வழிவந்தவர்கள் என்ற பழங்கதை ஒன்றிற்கேற்பத் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் சிங்களவர்கள் என்று சொல்லிக்கொண்டான். அவனரசே பின்னுளில் சிங்கள அரசு ஆனது.

இப்படி, எங்கிருந்தோ வந்து, ஏற்கனவே இருந்த அரசைக் கலைத்துத் தம் அரசை நாட்டிக்கொண்டோர் எப்படி இந்நாட்டின் பழங்குடிகளாவர்? இப்படி இடையிலே வந்தவனுக்கு இலங்கையைத் திருத்திய தமிழனை விரட்ட என்ன உரிமையிருக்கிறது? நாட்டின் அமைதியைக்கெடுத்ததற்காக வங்கத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள் தான் இங்குவந்துகுடியேறிச் சிங்களவர் ஆயினர். அந்தச்சிங்களவர்கள் காடு திருத்திக் கழனிகண்ட தமிழரை விரட்டியடித்தல் அறிவுடையதா?

★

காதல் மொழிகளை மரத்தடியிலும் முழு நிலவின் கீழும் எப்படியெப்படியோ பேசினர்! அப்போது அவர்கள் கட்டிக்கொண்ட கற்பனைக்கோட்டைகள் எத்தனையெத்தனை!

''அகில் மணக்க, சந்தனக்கட்டிலிலே அமர்ந்து, முழுநிலவைக் கண்டு மகிழ்ந்து, உன் முகத்திற்கு ஆயிரம் உவமைகள் பாடுவேன்! கண்ணே! எங்கெங்கோ பிறந்தோம்; உன் குடியும் என் குடியும், வேறு வேறு; என் தந்தையும் உன் தந்தையும் எந்த வழிகளிலும் உறவினரில்லை; என் தாயும் உன் தாயும் கண்டு கொண்டதுகூட இல்லை; ஆனுலும்...நாம் மனம் ஒன்றுபட்டோம்; நெஞ்சம் கலந்தோம்.

உலகத்தாரின் பார்வையில், நான் தமிழன்; நீ சிங்களப்பெண். காதல் உலகின் பார்வையிலோ, நாம் காதலர்கள். என் பார்வையிலோ நீ என் உயிர். உன் பார்வையிலோ நான் உன் உயிர்!'' என்ருன் அவன் ஒருநாள்.

''உயிரும் உயிரும் கலந்துவிட்டன, உடலும் உடலும் தனித்தனியே நின்ருலும். எவர் எதிர்த்தாலும் என்ன துன்பங்கள் குடைந்தாலும், நான் அஞ்சேன்; மருளேன்!'' என்ருன் மற்ருெருநாள்.

''காட்டில் விளைந்த பருத்தி, புதுப் பாட்டில் விளைந்த பொருள், சுவைக் கூட்டில் எழுந்த நயம் முதலிய எல்லாம் பல வாழ்க்கைத் தத்துவங்களைப் போதிக்கின்றன. அவற்றை நடைமுறையில் காட்டுவோம்.

எங்கோ விளைந்த பருத்தியால் எவனோ நெய்த ஆடையை எவ்விடத்திலோ உள்ள பெண் உடுக்கிருள்; மகிழ்கிருள்!

எங்கெங்கோ தனித்தனியே கிடந்த சொற்கள் கவிஞனின் கோலசைவில் ஆடுகின்றன; புதுப்பொருள் விளையாடுகிறது; கவிஞனை முன்பின் அறியாத ஒருவன் கேட்டு மகிழ்கிருன்!

பல்வேறு இடங்களிலே நடந்த வெவ்வேறு சுவைப்பட்ட நிகழ்ச்சிகள் கூத்துக்கலைஞனின் கண்களில் படுகின்றன. சோகத்தையும் இன்பத்தையும்; அவலத்தையும் மகிழ்ச்சியையும் கலந்து கலந்து அள்ளித் தருகிருன்; கலைஞனை முன்னும் பின்னும் அறியாத மக்கள் கூட்டம் அவன் கூத்தின் பின்னே செல்கிறது; ஆடி மகிழ்கிறது!

நீ எங்கோ காய்த்த பருத்தி! உன் இதழ் கூறும் புதுப்பாட்டு, நான் அறியாத தொலைவில் எங்கோ இருந்த சொற்களாகிப் புத்தின்பம் சிந்துகின்றது! நான் முன்னும் பின்னும் அறியாத புதுமைக் கூத்தை உன் உள்ளம் ஆடுகிறது!

ஆம்! எங்கோ பிறந்து வளர்ந்து செழித்து வளர்ந்த பருவக்கொடி நீ, எங்கிருந்தோ வந்த எனக்குப் புத்தின்பம் தருகிருய்! இரண்டுபேரும் இணைந்தோம்; இணையில்லா இன்பத்தை அறிந்தோம்!''

—இன்னொருநாள் இப்படியும் கூறினுன். இப்படி ஆயிரமாயிரம் கற்பனைகளுக்குள் அவன் அலைந்து மகிழ்ந்தபோதெல்லாம், வருங்காலத்தை உணராமலே திரிந்தான். அவன் நினைத்தபடியோ, நினையாதபடியோ எதிர்காலம் மாறிக்கொண்டிருந்தது. அரண்மனையில் பிறந்த அவளை, அவன் கைப்பிடித்ததும் காதலித்ததும் நடக்கமுடியாத செயல்கள். ஆனுல் அவை எப்படி நடந்தன என்பதையறிவதைவிட, அவற்றின் விளைவு என்ன என்பதை அறிவதுதான் சுவையானது; துன்பமானதும்கூட.

அமலசிங்கேயின் நாடெங்கும் மூண்டுவிட்ட இனக்கலவரத்தின் கொடுமையைக் கண்டு பயந்தனர் இருவரும். அடிக்கடி சந்திப்பதும் தடைப்பட்டது; தமிழர் குடும்பங்கள் ஒவ்வொன்ருய் நசிந்தன; கண்ணீர் வடித்தலறின; சிங்களவர் ஏந்திய படைக்கலங்களுக்குப் பயந்து காடுகளில் அடைக்கலங் கேட்டோடினர். உயிரும் உடலும், தசையும் நரம்பும், உணர்ச்சியும் எண்ணமும் இல்லாத நெடுமரங்கள்-இருட்காடுகள் தமிழர்க்கு இடமளித்தன.

குமரனுக்கு முன்னிருந்த ஒரே இரு கேள்விகள் சிக்கலானது. அவனும் அவளும் கொண்ட காதல் வாழ்வதா? இல்லை. அவன் மட்டும் காட்டுக்கோடுவதா?-இந்தக் கேள்விகள் குடையும் நேரத்தில் அரண்மனைப் பணிப்பெண் அவனுக்கு ஒரு சேதி செல்லவந்தாள்.

இளவரசி தீட்டிய திட்டப்படி அன்றிரவே, கோட்டை வாயிலைக் கடந்தது அவளது பல்லக்கு. கோட்டையைத் தாண்டி ஒருகல் சென்றதும், பல்லக்குத் திரும்பியது. அதில் முன்னிருந்த குமரனும் சோமாவதியும் மட்டும் இப்போது இல்லை.

காட்டுக்குள் நெடுந்தொலை சென்றுவிட்ட இருவரும் சற்றே ஓய்வெடுத்தனர். உடன்வந்திருந்த மாறநம்பி தூங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். அவன் அவர்களுக்கு உழைப்பதைப் பார்த்த அவள். ''அய்யோ, நீங்கள் ஏன் இவ்வளவு தொல்லைப்படுகிறீர்கள்?'' என்று அப்பணிகளைத் தான் மேற்கொள்ளப்போனுள். அவன் ''இன்றைக்கு நீங்கள் புது மணமக்கள். எந்த வேலையும் செய்யக்கூடாது, நான்தான் எல்லாம் செய்பவன்! சும்மா இருங்கள்!'' என்று சொல்லிவிட்டுத் தன் பணிகளைத் தொடர்ந்தான். பின் அருகில் ஓடிய ஆற்றில் நீர் எடுக்கச் சென்ருன்.

''தமிழர்களைப் பழிக்கும் சிங்கள இனத்துப் பெண்ணிடம் அவர் எவ்வளவு பிரியம் காட்டுகிருர்?'' என்று வியந்து கேட்டாள்.

''வியப்பதற்கொன்றுமில்லை! தமிழர்கள் பெரும்பான்மையாராய் வாழும் இடத்திலும் பிறர்மீது அன்புகாட்டத்தான் செய்கின்றனர், மண்ணுசை பிடித்த சில மன்னர்களைத் தவிர மற்ற எல்லாத் தமிழர்களிடமும் இந்த மனிதத்தன்மை இருக்கத்தான் செய்கிறது. நீ சிங்களக்காரியானுலும் எனக்குச் செந்தேனுகிவிட்டாய்; அவனுக்கு சொந்தச் சோதரியாகிவிட்டாய்!'' என்ருன் குமரன்.

மாறநம்பி நீரோடு வந்தபின் எல்லோரும் கட்டுச் சோறை ஒரு கை பார்த்துவிட்டு, கரையின் ஓரமாகச் சென்றனர். கரைக்குச் சற்றுத் தள்ளி, தடம் ஏதும்படாத இடத்தில் தமது படுக்கைகளைப் போட்டனர்.

மேற்கு வானத்தைப் பார்த்த மாறநம்பி, தொலைவில் தீயின் நாக்குகள் தெரிவதைக் கவனித்தான்.

''பக்கத்தில் ஏதோ ஓர் ஊர் எரிகிறது. நாம் இங்கு தங்கியிருப்பது சரியல்ல! ஊரை எரித்துவிட்டுத் திரும்பும் காலிகள் இவ்வழியே வந்தாலும் வரலாம். வாருங்கள். வேறு புறம் போகலாம்...'' என்று தூண்டினுன் நம்பி.

மருண்ட மான்போல் துடித்து நின்ருள்.

அவளை அணைத்துத் தேற்றினுன் குமரன். கொண்டுவந்திருந்த பொருள்களைத் தூக்கித் தோளில் போட்டு நடந்தான் நம்பி. கரையோரமாகவே காலால் தடம் பார்த்து நடந்தனர். கொஞ்சதூரம் செல்வதற்குள் அவர்களை எதிர்நோக்கிக் குதிரைகளின் குளம்பொலியும் அவற்றில் வருவோரின் ஆரவாரப் பேரொலிகளும் கேட்டன. அவள் நடுங்கினுள்.

★

...அப்போதுகூடத் தன் உள்ளம் இப்படிக் கலங்கவில்லை என்று அவன் நினைத்தான்.

ஆயிரம் ஆசைகள் நெஞ்சத்தில் எழுகின்றன. ஆனுல் அவை அத்தனையும் செயல்பட்டு விடுவதில்லை. பூக்கின்ற பூக்களெல்லாமா காயாகிவிடுகின்றன. பல்லாயிரம் பூக்கள் கொய்யப்பட்டு மங்கையர் குழலுக்கேறிவிடுகின்றன. சில காற்றைத் தழுவி ஆடிப்பாடித் தரையில் விழுகின்றன. வேறு சில காப்பாரின்றிக் கெட்டுவிடுகின்றன. சிலதான் செடியிலிருந்து விழாமலும் காற்றிடம் தோற்காமலும் காய்த்துப் பழுக்கின்றன. கூந்தலில் ஏருத எருக்கைப் பூக்கள்கூட ஆடுகளுக்குப் பலியாகின்றன. அவைபோன்றுதான் ஆசைகளும்! பூப்பதெல்லாம் காய்ப்பதில்லை; பழுப்பதில்லை! காய்த்துப் பழுத்து அழுகுகின்றவைகூட உண்டு!

அவனும் அவளும் ஆயிரம் ஆயிரம் ஆசைக் கோட்டைகளைக் கட்டியிருந்தனர். அத்தனையும் பலிக்கவில்லை. தோல்விமேல் தோல்வி கிடைத்த போதும் ஒரு நப்பாசை அவனைத் தூண்டியது. அதனுல்தான் அலைகடலைக் கடந்தான், மாறநம்பி தந்த படகுமூலம். இரவெலாம் போராடிப் போராடி, அதிகாலையில் தமிழகத்தின் கரையைக் கண்டுவிட்டான்.

அலைகடலிடம் போராடிப் போராடி, உச்சிப்புளிக்கு வந்துசேர்ந்தான். படகிலிருந்து கரையிறங்கக்கூட அவளுக்கு ஆற்றலில்லை. நடைப்பிணம்போல் வருந்திய அவளைக் கைத்தாங்கலாக இறக்கி நடத்தினுன். அவள் அவன் தோளில் சாய்ந்தவாறே நடந்தாள். அப்படிச் சென்றும் பத்துப் பதினைந்து எட்டுகளுக்குமேல் எடுத்துவைக்க முடியவில்லை அவளால். ''வலியாயிருக்கிறது!'' என்ருள். அவன் அவளை உட்காரவைத்தான்.

மணற்பரப்பே சந்தனக்கட்டிலானது. அவர்கள் வாழ்வேட்டிற் புதிய ஒளி ஒன்றின் வரவு பதிவானது.

தோளில் சாய்ந்தவாறே நடந்து வந்த அவள் இப்போது ஓர் அடியும் எடுத்து வைக்கமுடியாது திண்டாடினுள். அவன் தன் துன்பங்களை மூடி வைத்துக்கொள்ளமுடியாமல், வாய் விட்டலறிவிட்டான்.

''கண்ணே! நான் கெட்டதுமில்லாமல் உன்னையும் கெடுத்துவிட்டேனே!''

★ மா. பாண்டியன் ★

"சே! சே! என்னுல்தான் உங்கட்குத் துன்பம்... இல்லை... இல்லை,... யாராலும் யாருக்கும் துன்பம் இல்லை... கொஞ்சம் உட்கார்கிறீர்களா?" என்றுள் அவள். அவனும் உட்கார்ந்தான். அவளைத் தன் மடியில் கிடத்திக்கொண்டான்.

குழந்தையின் பிஞ்சு விரல்களை எடுத்து, கன்னத்தில் வைத்துக் கொண்டாள் அவள். போட்டியில் வென்றவனுக்குக் கிடைத்த பரிசைவிட, இல்லறத்தில் பெற்ற பிள்ளை அதிக மகிழ்ச்சியைத் தரும் பெண்ணுக்கு. வாழ்க்கை சொல்லும் இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்தவள்தான் அவள். ஆனுல் அந்த மகிழ்ச்சி முழுவதையும் அவளால் சுவைக்க முடியவில்லை.

"மன்னன் மகள் தாயானுள்; மகிழும் சேதி கேளீரோ!" என ஊரரெல்லாம் மகிழ்ந்தபடி வாழ்த்து வழங்கி முரசொலித்திருப்பர் இந்நேரம், அவள் மட்டும் பழைய நிலையில் இருந்திருந்தால். தாய் வாழும் மன்னன் மாளிகையில் பிறக்க வேண்டிய குழந்தை, தமிழ்மகளின் நெய்தல் படுக்கையில் பிறந்திருக்கிறது. தமிழ்மண் அவள் தாய்மண்ணைப்போலக் கொடுமையானதில்லை. என்றுலும் திக்குத் தெரியாத காட்டிலே, நிலவொளியிராத இரவிலே திரிவதுபோன்ற அச்சம், அவளுக்கு. அந்த இருளில் அவள் கண்களுக்குப் பட்ட ஒரே ஒளி குமரன். அந்தக் காட்டில் அவள் வாழ்வுக்கு நம்பிக்கையூட்டும் ஒரே கனி அவள் பெற்ற அருஞ்செல்வம். இனிச் செத்தாலும் கவலையில்லை; கணவனுக்குத் தர வேண்டியதைத் தந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி அவள் நெஞ்சிலே விளையாடியது.

அவன் கையை எடுத்துத் தன் கண்களிலும் கன்னத்திலும் வைத்துக் கொண்டான். கையை இறுகப் பிடிக்க முனைந்தாள். ஆனுல் அவள் கைகள் நடுங்கின. குமரன் திகைத்தான். "கண்மணியின் கைகள் நடுங்குவதேன். ஐயோ தமிழகமே! உன்னை எவ்வளவு நம்பிவந்தேன்? கையேந்தி வந்திருக்கிறேன். கையுதறிவிடுவாயா?" என அவன் உள்ளம் கண்ணீர் வடித்தது.

புதிய வரவு நொந்த மனதுக்குச் சற்று ஆறுதலைத் தந்தாலும் அவளிடம் ஏற்கனவே இருந்த சக்தியும் இப்போது போய்விட்டது. நடக்கமுடியாது திண்டாடிய அவள் விழிகள் அலையும் ஆற்றலையும் இழந்தன. அவன் விழிகள் மட்டும் அலைந்தன. சற்றுத் தள்ளித் தெரிந்த தோப்பையடைந்தான். தான் அமர்ந்து அவளைத் தன் மடியில் கிடத்திக்கொண்டான்.

சாவு அவளைப் பறித்துக்கொண்டிருந்தது. அவன் அதை எதிர்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த கிணறில் நீர்மொண்டு வந்து தந்தான். அவளுக்குச் சற்றுப் புதுத் தெம்பும் கிட்டியது. குழந்தையை வாங்கி நெஞ்சொடு அணைத்தாள்.

"தமிழகத்தின் இனிய காற்று எனக்குப் புது நம்பிக்கையைத் தருகிறது!" என்றுள். அவன் வானவீதிகளில் மிதந்தவாறே, தன்னைப் பற்றும் கைக்குத் தன் கையை ஒப்படைத்தான். தெம்புடன் பேசித் தன் கையைப் பிடித்தவள் கை தடுமாறுவதை-நடுங்குவதை உணர்ந்த அவன் கலங்கினான். "கண்ணே! ஏன் இப்படி அலமந்து பார்க்கிருய்? என்ன உடம்புக்கு? எது வானுலும் என்னைக் கைவிட்டுவிடாதே. கண்ணே! இதோ பார் அருங் கனியை..." என்றலறினான்.

குழந்தையை அவள் முகத்துக்கு நேராகப் பிடித்தான். அவள் விழிகள் அசையாமல் ஆடாமல் அப்படியே நின்று பார்த்தன். அவள் கைகள் குழந்தையின் கன்னத்தை வருட எழுந்தன...

★

தனது அரசுக்கட்டிலைத் தமிழரின் கல்லறைகளுக்குமேல் அமைத்துக் கொண்ட துட்டகமுனு கூடப் பின்னுளில் கலையில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் கீழாண்ட அமலசிங்கே மட்டும் தமிழர்மீது தீராப் பகைமை பாராட்டியது விந்தையே! அவன் துட்ட கமுனுவை நல்லவனுக்கி விட நினைத்தானே என்னவோ?

அமலசிங்கே பெற்றெடுத்தவை ஓர் ஆணும் பெண்ணும் என்பதைவிட, ஒரு நச்சுப்பாம்பும் ஒரு முழுமதியும் என்று சொன்னுல்தான் பொருந்தும். அவன்பெற்றெடுத்த ஆண்குழந்தைக்கு அமரசேனே என்ற பெயரை வைத்ததற்குப்பதிலாக, நாகப்பாம்பு என்று பெயர் வைத்திருக்கலாம். அவன்

கல்லான இதயத்தான் துட்டகமுனு
கல்லாகி நிற்கின்ருன்!

தான் போகின்ற இடமெல்லாம் வம்பை விலைக்கு வாங்கினுன்.

அது ஓர் எளிய சேதிதான். அதை அமரசேனே பெரிதாக்கியிருக்க வேண்டாம். அங்காடிக்கு வந்திருந்த சிங்களப்பெண் ஒருத்தி விலைகேட்டுக் கொண்டிருந்தாள். அதே நேரத்தில் அவளோடு வந்து விலைகேட்ட தமிழன் ஒருவன், "வண்டி நடுப்பாதையில் நிற்கிறது. விரைவில் கொடு, துணி ஒன்று!" என்று கேட்டான். கடைக்காரன் அவனுக்கு முதலில் துணியைக் கொடுத்துவிட்டான். வந்தது சிங்களத்திக்குக் கோபம்! "நான் காத்துக் கொண்டிருக்கையில் நீ என்ன அவசரப்படுவது?" என்று அவள் சீறினுள். "இல்லை! நான் கிராமத்திற்குப்போக வேண்டியவன். பொழுது இருட்டிவிட்டதால் விரைந்து தரக் கேட்டேன்!" என்றுன் தமிழன். அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்த அமரசேனே, சிங்களப் பெண்ணை எதிர்த்துப் பேசும் தமிழனைக் கண்டதும் கோபப்பட்டு விட்டான். "பிழைக்க வந்த நாயா, வாழ்ந்துவரும் இனத்துப் பெண்ணை எதிர்த்துப் பேசுவது?" என்று சீறினுன். குதிரையை விட்டிறங்கி அந்தத் தமிழனை அடித்தான். உடனே கும்பல் கூடிவிட்டது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த தமிழன், அமரசேனேயின் சொற்களும் கைகளும் எல்லை மீறியதைக் கண்டதும் தன் கையை நீட்டிவிட்டான். அங்காடிக்கு வந்திருந்த மக்கள், கூட்டம் கூட்டமாகப் பிரிந்து தாக்கிக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். அமரசேனே இளவரசன்தான். ஆனுலும் பாதுகாப்பற்று வந்த நேரத்தில் வம்பை விலைக்கு வாங்கிவிட்டதால், எதிர்ப்பைத் தகர்க்க முடியாது திண்டாடினுன். அவன் ஆடைகள் சின்னுபின்னப்பட்டுவிட்டன. சில சிங்களவர் கூடித் தமிழர்களின் கவனத்தைத் திருப்பிய நேரத்தில், அவன் குதிரை மீதேறித் தப்பி ஓடினுன்.

கொள்ளையையும் கொலையையுமே வாழ்க்கைக்கு வழிகளாக்கிக்கொண்டவர்கள் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டார்கள்.

"ஏலாளன் மாண்டுவிட்டான் என்றிருந்தோம். என்றுலும் அவன் பரம்பரை இன்னும் இருக்கிறது! இளவரசனையே தாக்கிவிட்டது அவனது பரம்பரை! அதைச் சும்மா விடலாமா?" எனப்பேசித் தீயைக் கிளறி விட்டனர் பலர். உண்மையல்லாத பல நூறு கதைகள் பரவின. ஊரின் அமைதியும் ஒழுங்கும் குலைந்தன. தனக்கேற்பட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ள, அமரசேனேதானே கலகக்காரர்களுக்கு ஆதரவளித்தான். அதனுல் விளைந்த எல்லாவற்றையும் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்த அமலசிங்கனும் தன் அருமை மகள் ஓடிவிட்ட பின்தான் திகைத்து நின்றுன்.

"தமிழர்களுக்கு நீங்கள் அதிகஇடம் கொடுக்கிறீர்கள். அவர்களை அடித்து விரட்டாது, இன்னும் இந்த மண்ணிலேயே வைத்திருக்கிறீர்களே! தீயை மடியில் கட்டிக் கொண்டிருப்பதா, அறிவுடையவன் வேலை? எதிரியைத் தன் மண்ணிலேயே வாழவிட்டுக் கொண்டிருப்பதா மன்னன் செயல்? தூக்கி எறியுங்கள் கடலலைகளில், அந்த நாய்களை! முதுகெலும்பற்ற அந்த வெளிநாட்டாரிடம் நமக்கேன் அச்சம்?" என்பான் அமரசேனே ஒருநாள்!

"போர்க்களம் வேட்கும் சிங்களக் குருதி உங்கள் உடலில் ஓடவில்லையா? நீங்கள் அணிந்திருப்பது வீரக் கழல் இல்லையா? ஏந்தியிருப்பது பொங்கும் மறப்புகழின் போர்வாள் இல்லையா?" என்பான் மற்ருெரு நாள்.

அத்தனையையும் கேட்டுக்கொண்டு தானிருந்தான் அமலசிங்கே. அவனுக்கும் தமிழர் மீது மாருத வெறுப்பு. என்றுலும் இருக்கின்ற கொஞ்சத் தமிழர்களையும் துரத்திவிட்டால் உழவு வேலைக்கு யாரை நம்புவது? சிங்களவர்கள்தான் உண்டுறங்குவது தவிர வேறறியாத சோம்பேறிகளாயிற்றே! அதனுல்தான் பயந்துகொண்டிருந்தான்.

அவனுக்கு வேருேர் அச்சமும் உண்டு. துட்டகமுனு தன் அப்பனையே எதிர்த்துவிட்டு ஆட்சிக்கு வந்தவன். அதுபோல விரைவில் ஆட்சிக்கு வர எண்ணி, அமரசேனே தன்மீது அதிகாரம் செலுத்துகிருனே? - இப்படி வேறு அஞ்சினுன் அமலசிங்கே. அதனுல்தான் மகன் சொல்லும் எதையும் உடனே கண்டிக்கவோ. மறுக்கவோ அவனுல் முடியாதிருந்தது. ஆனுல் தன் மகளையே தமிழர்கள் கடை வீதியில் தாக்கிவிட்டனர் என்றதும், அவன் பழைய அமலசிங்கேயாகிவிட்டான்.

"எவனே ஒரு தமிழ்ப் பொடியன் தான் அவளை இழுத்துச் சென்றுவிட்டான். நான் சொன்னபடி நடந்திருந்தால் இந்த வம்பு வந்திருக்குமா? இன்னும் இரண்டு நாட்களுக்குள் சோமாவதியைக் கண்டுபிடித்துச் சேர்ப்பிக்காவிட்டால் நான் வேறு வழிகளைக் கையாள வேண்டியிருக்கும். பிறகு நீங்கள் இந்த நிலையில் இருக்க மாட்டீர்கள்!" என்று சொல்லிவிட்டுப் போனுன். அவன் அப்படிச் சொல்லிப் போய் இரண்டாவது நாளும் ஆகிவிட்டது. "இன்னும் சிறிது நோத்தில் பொழுது புலர்ந்ததும் அமரசேனே வந்துவிடுவானே!" என்று இராத் தூக்கமற்றுத் திண்டாடிக்கொண்டிருந்தான் அமலசிங்கே! அப்போதுதான் இளம் போர்வீரன் வந்து, "இளவரசியைக் காணேம்!" என்றதும் அரசன் வெறிபிடித்து அவனைத் தாக்கியதும், பின் புத்தர் கோவிலுக்கு ஓடினதும் தொடர்ந்து நடந்தன. புத்தரைத் தொழுகையிலேயே, அமரசேனே தன்னைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிவிடுவானே என்ற ஐயமும் எழுந்தது! அந்த வேதனையுடன் அவன் மல்லாடுகையில்தான் கொப்பளிக்கும் சினத்துடன் அமரசேனே உள்ளே நுழைந்தான். அவன் முகம் இரையைத்தேடும் சிங்கமாய் வெறித்தது. சிந்தை தளர்ந்தழிந்த அமலசிங்கே அழிந்து வீழ்ந்தான்.

கத்தியை உருவிக்கொண்டு வந்த அமரசேனே, அமலசிங்கேயின் உடலை நெருங்கியதும் ஓங்கியிரைந்தான்! கோவில் எங்கும் ஒரே எதிரொலி! இடிமுழக்கத்தின் எதிரொலி!

"கோழை!"

"கோழை!"

நூருயிரம்முறைகள் எதிரொலித்தது!

—தொடரும்—

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துத் திமிர்வாதம் பேசுகின்ற மந்திரிகளை எண்ணும்போதெல்லாம் இவர்களின் கடந்தகால இழிநிலைகள் நினைவுக்கு வரத்தான் செய்கின்றன. கழகத்தின் கொள்கைகளை நன்ருகப் புரிந்துகொண்டு மறுமொழி தருவதற்கு மந்திரிகளின் பட்டாளம் தயாராக முன்வராவிட்டாலும் தரங் குறைந்த முறைகளிலே ஏசுவதற்குத் தங்களைத் தயார் செய்துகொள்கிருர்கள்! இதில் முதலிடம் பெறுகிருர் முதலமைச்சர் எனப்படும் பெரிய மனிதர்! முன்னேற்றக் கழகத்தைத் தாழ்த்திப் பேசுகின்ற முதல்வர் தன்னுடைய பதவியை பதவிக்கேற்ற பண்புகளின்படி வைத்துக்கொண்டுள்ளாரா என்ருல் இல்லையென்றே விடை கிடைக்கும்! சென்னை சட்டமன்றத்தின் முதலமைச்சர் - அங்கே சர்க்கார் கட்சித்தலைவராக சுப்பிரமணியத்தை வைத்துக்கொண்டிருப்பது ஏன்? விவாதங்களுக்குப் பதில் கூறுவதில்லையே - கூறத் தெரிவதில்லையே! ஏன்? ‘ஆகட்டும்-பார்க்கலாம்’ மட்டும் இருந்தால் ஆட்சித் தலைவராகிவிடுவதா? அவர் அள்ளியள்ளித் தந்த அரசியற் கருத்துக்களைக் கேட்டவர்கள் உண்டா? “I is the Chief Minister” என்று தன்னை அதிமிகுதியாக அறிமுகப்படுத்திக்கொண்டாரே, அந்தக் கோரக் காட்சிகளை நாம் மறந்தாலும் காங்கிரசுக்காரர்கள் மறக்க முடியாதே! இவரும் தன் பொல்லாத வாய்திறந்து செல்லரித்துப்போன வார்த்தைகளைச் சொல்லுகிருர்! பிச்சைக்காரர்கள் என்று முன்னேற்றக் கழகத்தவரைப் பார்த்துப் பேசிய நேரத்தில் அவரது உடல்நிலை அவ்வளவுக்கு மோசமில்லை. இன்னும் குணப்படுத்தக்கூடிய நிலையிலே இருக்கிருர் என்று எண்ணினேம். அந்த அப்பாவி மனிதரோ நமக்கு நேர் எதிரோட்டிலே நடைபோட்டார் மிகமிக வேகமாக! தூத்துக்குடியிலே போய் துணிந்து பொய் சொன்னர் முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் எல்லாம் நொண்டிகளைப் போன்றவர்கள் என்று! ஊட்டிக்குப் போகவேண்டாம் என்ற நினைப்பு வந்தவுடனேயே இவருக்குத் தலை கொதிக்கிறது - வேளை தவருமல் வேலை செய்யவேண்டிய மூளை ஊனப்பட்டுவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியும் எழுச்சியும் அறிந்த அமைச்சர் காமராசர் தன்னுடைய சிந்தனைக்குரிய விசயமாக எடுத்துக் கொள்ளாமல் எதையோ பேசித் தன் அறியாமையைப் புலப்படுத்திவிட்டனர்! முன்னேற்றக் கழகத்தவரும் - அவர்களை ஆதரிப்போரும் முடங்கள் என்று காமராசர் சொன்னுல் அது சரியா என்று எண்ணிப் பார்க்கும் உரிமை, அவருடைய செல்லாக்காசுக்காக சரீரத்தையும் சாக்கடை நிரப்பிய பேனவையும் அவரது காலடியிலே வீழ்த்திவிட்டவர்களுக்கு இல்லாவிட்டாலும், மற்றவர்களுக்கு நிச்சயமாக உண்டு!

இந்தியத் துணைக்கண்டத்தில் எத்தனையோ முதலமைச்சர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எல்லாம் தன்னுடைய ஆட்சியின் மாட்சிகளைப் பேசுவார்கள்-சட்டசபையிலே ஊமையாக உட்கார்ந்திருந்துவிட்டு, அறிஞர் அண்ணு பேசுவதைக் கேட்கும் போது மட்டும் வாய் பிளந்து காட்சி தந்துவிடும், காமராசர்களாக இல்லை. காமராசர் கணக்கிட்டதுபோல அண்ணுவும் மற்றவர்களும் அரசியல் நொண்டிகள் என்பது உண்மையானுல் அண்ணு சொன்ன அரசியல் கருத்துக்களைக் காட்டிலும் சிறந்த உயர்ந்த, சிக்கலைத் தீர்த்த அறிவுரைகளைக் காமராசரும் கக்கனும் அவர்தம் “கன்னிமேரித் தாயும்” சொல்லியிருக்க வேண்டுமல்லவா? 1957 முதல் 1960 ஆன இன்று வரை முதலமைச்சர் காமராசரின் பேச்சுக்களின் பொன்னுன சொற்கள் எத்தனை? அரசியல் நொண்டியாக மற்றவர்களைச் சொன்ன காமராசர் சட்ட சபையில் தன்னுடைய நொண்டித் தன்மையை நீக்கியதுண்டா? எதிர்தரப்பு மறுப்புரைகளைத் தன்னுடைய வீரப்பேச்சால் விளக்கியதுண்டா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்களின் அருமையான அலங்காரக் கருத்துக்களை காமராசர் புரிந்து கொண்டதுண்டா? Food-Stuffs - Food Grains - உணவுப் பொருட்கள் உணவுத் தானியங்கள்-இரண்டுக்கும் உள்ள வேறுபாடு விளங்கியதுண்டா முதலமைச்சருக்கு! கடந்த மூன்று வரவு-செலவுத் திட்டங்களின் விவாதத்தில் அண்ணு அவர்கள் பேசிய கருத்துக்களுக்குப் பதில்தரும் பண்பும் பக்குவமும் காமராசருக்கு உண்டா என்பதைத் தெரிய நல்லவர்கள் விரும்புகிருர்கள்! அல்லது-1960 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் தகுதி திறமைகளை - தன்னுடைய சர்க்காரின் அருமை பெருமையை-நிதி யமைச்சருக்குப் பதிலாக எடுத்துப் பேசும் திறமையும் ‘குடியேற்றத்துக் குணளருக்கு’ இருப்பதுண்டா? அண்ணு அரசியல் நொண்டியென்ருல், ஊமைகளின் தனிப் பெருந்தலைவர் ஏன் இந்தச் சட்டமன்றத்தில் பேசுவதற்குத் தன்னைத் தயார் செய்துகொள்ளக் கூடாது? தரம் உயர்வது தவரு? காமராசர்களுக்கு ஆணவம். உண்மையில் அறிவையும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்ட தென்ருல், சட்டமன்றத்தில் அண்ணுவின் கருத்துக்களுக்கு மாற்றுத் தெரிவிக்க முன்வரட்டும். அங்கே மந்திரி நாற்காலிக்குள்ளே உடலை மறைத்துத் தலையைமட்டும் நீட்டி அண்ணுவின் பேச்சைக் கேட்டுவிட்டு, தூத்துக்குடியிலே போய் ‘நொண்டிகள்’ என்று ஏசுவது, எவ்வளவு தரங் கெட்ட செயல் என்பதைத்தான் இப்போதாவது உணர வேண்டும். ஆளுங் கட்சியினரின் இழிசெயல்களை மறைக்க முன்னேற்றக் கழகத்தின் மீது மட்டரக மொழிகளைத் திரட்டி வீசிக் காட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் அத்தனை பேர்களுக்கும் சர்க்காரின் கொலுப் பொம்மைகளுடைய நிலையினை எடுத்துக் காட்டுகிருேம். ஏனெனில் இவர்களே இப்படி இருக்கும்போது அவர்களின் கருணைக்குக் காத்திருக்கும் சொக்கலிங்கம் போன்ற இரவல் சரக்குகளுக்கு எரிச்சல் அதிகமாகத்தான் இருக்கும்! தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கமிட்டி தன் கண்ணியத்தைக் காத்துக்கொள்ளட்டும்! ★

அறிவிப்பு

கடந்த இதழில் இரண்டாம் பக்கத்தில் வெளியாகியுள்ள தாமஸ் மசாரிக் பற்றிய கட்டுரையை எழுயவர் தோழர் “கிரீன்லாம்ப்” ஆவார். கட்டுரையாளர் பெயரைக் குறிப்பிடத் தவறியமைக்கு வருந்துகிருேம்.

—12-ம் பக்கத் தொடர்ச்சி—

கையுள்ளவன் வாயுள்ளவன், அவர்கள்உழைப்பைத் தன் வீட்டுக்குத் திருப்பி விட்டுக்கொள்கிருன். காடு மேடுகளிலும், பட்டிதொட்டிகளிலும் அலைந்து விநோபாவின் அடியார்கள் காந்தியின் புகழை வளர்க்கிருர்கள். காங்கிரசு ஆட்சியாளர்கள் எளிதாக அந்தப் புகழின் பயனை அறுவடை செய்து ஆட்சிக் கட்டிலேறி விடுகிருர்கள். அத்தோடு தமது வீட்டையும் வாசலையும் வளப்படுத்திக் கொள்கிருர்கள். இவற்றை எல்லாம் எண்ணி நொந்து நொந்து பின்தான் சொல்லியிருப்பார் விநோபா! அவர் என்ன புலம்பி என்ன பயன்? ஏழை சொல் அம்பலமேறவா போகிறது? இப்போது தில்லியம்பலத்தில் ஆடுவோர்தாம் கண்மண் தெரியாது ஆடுகின்றனரே!

x x x

அரசும் சட்டமும் கார்வேகம் காற்று வேகம் எல்லாம் தோற்கும்படிச் செயல்படுகின்றனவாம். கேரளாவில் பதினெட்டு வயதுடைய பவானி ஆண்வேடம் போட்டு தேங்காய் திருடியதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிருள். பாவம், பவானி! ஆண் வேடம் போட்டதற்குப் பதிலாக அவள் காங்கிரசுக்காரன் வேடம் போட்டிருந்தால், அவள் எதையும் திருடியிருக்கலாம்; எவரும் கேட்டிருக்கமாட்டார்கள் அவள் நள்ளிரவில் திருடியும் பிடிப்பட்டாளாம். காங்கிரசுக்காரன் வேடம் போட்டால் பட்டப் பகலில் கூடத் திருடலாம்! இதை அறியாத அந்தப் பேதைக்கு “சஞ்சீவி மாடல் சவநாயகத் தேர்தல்”தான் உதவி செய்ய வேண்டும்!

x x x

மலைஞாலத்துப் பவானியை நினைத்ததும் எனக்கு என் மாணவப் பருவம் நினைவு வருகிறது. அந்த நாட்கள் வாழ்க்கையின் வசந்த நாட்கள். கட்டுப்பாடு ஏதும் இலலாது மாணவர்கள் விடுதலை வாழ்வு வாழ்கின்ற நாளல்லவா அது? இந்தப் பவானி தேங்காயைத் திருடினுள். வேறு யாராகிலும் ஒரு பவானி எங்கள் உள்ளத்தைத் திருடிவிட்டால் பின் குடும்பத் தொல்லைதான். அந்தத் தொல்லைக்காளாகாத மாணவப் பருவம், உண்மையிலேயே இனிப்பான பருவம்.

x x x

எந்தக் கட்டுப்பாட்டிலும் தங்களைப் பணியவைத்துக் கொள்ளாத தமிழக மாணவர் படை, இனஉணர்வுக்கு மட்டும் தன்னைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. நகரங்களுக்கு வந்து படித்துச் செல்கின்ற மாணவர்களே, சிற்றூர்களில் நம் கொள்கையைப் பரப்புகின்ற இலட்சியத் தூதர்களாக விளங்குகின்றனர் இதை மறைப்பதற்காகவோ, என்னவோ அரியலூர் அளகேசர் தன் மூட்டையை அவிழ்த்திருக்கிருர்.

x x x

மாணவர்கள் நம் கழகத்திற்குக் காட்டிவரும் ஆதரவை அரியலூரார் உடை உடை என்று உடைத்துவிட்டாராம். “போராட்டக் காலத்தில் தெருவிளக்கை உடைத்தேன்! குப்பைத் தொட்டியை உடைத்தேன்!” என்று எந்தக் காங்கிரசுக்காரன் சொன்னுலும் அது நூற்றுக்கு நூறு உண்மையாகும். “கழக மாணவர் படையை உடைத்துவிட்டேன்!” என்று யாரேனும் சொன்னுல், இனி நாம் அவர்கள் குட்டை உடைக்க வேண்டியதுதான்!

x x x

கூலிக்குப் படை பிடித்து, சாவுக்கு மாரடிக்கும் காங்கிரசுத் தலைவர் எதை எண்ணி இதைச் சொன்னுரோ, நாமறியோம்! சேலத்தில் நமது மாணவர்கள் மாநாடு நடத்தியதும், அவர்களும் மநாடு நடத்த எண்ணிப் படாத பாடு படுவதை நாமறிவோம். இதுவரை திராவிட மாணவர்கள் கடந்த ஐந்து திங்களில் ஆறு மாநாடுகளை நடத்தி வெற்றி கண்டிருக்கின்றனர். “காங்கிரசு மாணவர்” மாநாட்டில் சுப்பிரமணியனுர்கூட அழைக்கப்பட்டிருப்பதாகக் கேள்வி. நம் மாநாட்டிலோ முழுக்க முழுக்க மாணவர் தோழர்களே பங்கெடுத்துப் பேசியிருக்கின்றனர். எந்த அரசியல் வாதியும் வரவில்லை. அண்ணு சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் காட்டுகிருர். அவர் போகாமலே மாணவர் படை அணியில் திரள்கிறது. சுப்பிரமணியமுர் பிறரும் ஓடோடிப் போய்க் கூப்பிட்டுப் பயனில்லை. இந்த வயிற்றெரிச்சலைத்தான், அளகேசர் அவ்வளவு பெரும் பொய்யின், மூலம் கொட்டித் தீர்த்திருக்கிருர்!

வாழைக்குத் தான் ஈன்ற குலையே அழிவு என்பார்கள். காமராசருக்கு அவர் வளர்க்கும் பொய்யே அழிவாக வரப் போகிறது. இது உண்மை; உறுதி!

—செழியன்.

கல்லூரியில் கண்ணதாசன்

புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் இலக்கியம்

“உவமைகளோடு போராடுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் தமிழ்க் கவிஞர்கள். நமது இலக்கிய மரபுக்கு உவமைகள் மூலம் அவர்கள் செய்த தொண்டுகள் கொஞ்ச நஞ்சமல்ல. தனித் தனிச் சொற்களுக்கு அவர்கள் உவமைகள் தேடியதன்மூலம் செயல்களையும் உவமையிலேயே சொல்லப் பழகிக்கொண்டார்கள். ஆணென்ருல் புலி என்றும் பெண்ணென்ருல் மானென்றும் சொல்லப் பழகிக்கொண்டவர்கள், ஆணும் பெண்ணும் புறப்பட்டார்கள் என்பதையே, புலியும் மானும் புறப்பட்டன என்று எழுதத் தலைப்பட்டார்கள். அதன்மூலம் சுருங்கிய வாழ்க்கைத் தத்துவங்களுக்கே நிறைந்த இலக்கியங்களைப் படைத்தார்கள். ‘கண்டார்கள்; காதலித்தார்கள்’ என்ருல் கதை முடிந்துவிடும். இந்த இரண்டு வார்த்தைகளில் முடிக்கிற காவியம், இரண்டு லட்சம் பாடல்களுக்கு எப்படி விரிந்தது? ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தெடுத்துக்கொண்டே போனவர்கள், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோராயிரம் விளக்கங்கள் தந்தார்கள். அந்த விளக்கக்கள் இலக்கியங்களை வளர்த்தன. வளர்ந்த இலக்கியங்கள் தமிழை வாழவைத்தன. தாக்குதல்களைத் தாங்கியும் தமிழ் சாகாமல் பிழைத்தது. ஆகவே என்றென்றும் வணங்கப்பட வேண்டியவர்கள் பழந்தமிழ்ப்புலர்கள்தான்.”

—19-2-60 அன்று புதுக்கோட்டை அரசர் கல்லூரித் தமிழ் மன்ற விழாவில் குறிப்பிட்டது.

என் தாய்

(7)

கரூரில் 1904-ல் என் அன்னை பிறந்தாள். வேடல் என்ற ஊரைச் சேர்ந்த கதிர்வேலுவின் கைபிடித்தாள்; அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி பூத்தது, ஆறு தடவை. ஆம்; என் அன்னை இவ்வுலகுக்கீந்தது ஆறு செல்வங்கள்!

"ஊரெலாம் புகழவேண்டும்; நாடெலாம் இவர்களை வாழ்த்தவேண்டும்!" என்று நாளெலாம் கொள்ளை ஆசை அன்னைக்கு. "நம் வீட்டின் கண்மணிகள் உலகின் ஒளி மணிகளாய்த் திகழ வேண்டும்!" என்ற அளவிறந்த ஆசை என் தந்தைக்கு! காலம் நினைவின் ஓட்டத்தை ஏற்றுக்கொள்கிறதா? காற்று நம் விருப்பப்படி செல்கிறதா? இல்லை! இல்லை! தந்தையும் தாயும் சிந்தையெலாம் நொந்துருக, நெஞ்செலாம் செத்துமடியக் கொடுமைகள் ஒன்றன்றாய் எழுந்தன!

அன்னை கண்ட ஒரே பற்றுக்கோல் இற்றுக் கெட்டது. ஆம்! எந்தைக்கு நோய்; சிந்தைக்கு இனிக்காத செய்தி!

நொந்த அன்னை ஊர் ஊராய் அலைந்து மருத்துவம் செய்தாள். சென்னைக்கும் வந்தோம்! ஆனால் "முன்னைக்கு இப்போது நன்று!" என்று சொல்ல முடியவில்லை. வாழ்வேடு ஒன்று கிழிந்துவிட்டது! -அவ்வளவுதான் சொல்லமுடியும்!

என் அன்னையின் தலையில் முன்னிலும் அதிகபாரம்! தந்தையைக் காப்பதற்கென்று இருந்த சொத்துச் சுகத்தையெல்லாம் விற்றிருந்தாள். மீதி இருந்ததையும் எங்களைக் காக்க விற்றுவிட்டதால் ஏதும் அற்றிருந்தாள். புட்டுக்கு மண் சுமந்தான் ஒருவன் எனக் கதை சொல்வோரே! பிள்ளையைக் காக்க இவள் மண் சுமந்தாள்! கல் உடைத்தாள்! காணாத எவனெவனையோ கவி பாடித் துதிக்கும் அடியார்களே! கண்டீரோ, என் தாயின் பேரன்பை!

பண்புகளின் பெட்டகம் என் தாயாவாள்! அன்பின் பேராறு என் தாயாவாள்! அண்ணாவின் தொண்டைமண்டலத்தில் என்தாய் பிறந்தாள். என் உள்ளத்தில் ஊற்றெடுத்து, பெருக்கெடுத்து நின்ற நற்கொள்கைக்கு ஊறு செய்தனர் ஊரார். அப்போது அன்னையவள் சொன்ன வழி-பட்டபாடு-சொல்லாவிடில், அவள் பெருமை கூறினேன் ஆகேன்.

கொள்கைவழித் திருமணத்தை முடிக்க ஊரார் மறுத்தபோது, அவள் சென்றாள் திடத்தோடு. சிங்கத்தோழர் சி. வி. எம். அண்ணாமலையோடு, சம்பந்தியார் வீடடைந்து நாட்டு நடப்பை விளக்கிவந்தாள். கரைத்தாள்; அன்னார், கரைந்தனர்! அண்ணன் சி. வி. எம் அண்ணாமலை தலைமையிலே என் வெற்றி விழா! ஆம், நல் மணவிழா! மகனின் மனதுக்கம் கொள்கைக்கும் உதவி நிற்கும் அந்த அன்னை தந்த பதில் ஒன்றே அவள் பெருமை உரைக்கும்.

தென்னாட்டின் கண்ணானார் அண்ணா! அவர் தேர்தலுக்கு நின்றார்; அன்று ஊரெங்கும் அலைந்து, இல்லெங்கும் நுழைந்து "வாக்களிப்பீர்! வாக்களிப்பீர்!" எனக் கேட்டு வந்தோம். எங்கள் தொண்டு இவ்வழியாக, என் அன்னையும் சென்றாள், பெண்டிரிடம் வாக்குக் கேட்க. துடுக்கான பெண் ஒருத்தி கேட்டாள் அன்னையிடம்: "உங்கள் அண்ணா ஒருவர்தானே! அவர் ஒருவர் சென்றால், எதைச் சாதிப்பார்? என்ன பயன்?"

என்றந்தப் பெண் கேட்டவுடன் என் அன்னை சொன்னாள் துடிப்புடனே: "இருண்ட வீடு பெரிதுதான். என்றாலும் அவ்வீட்டிற்கு ஒளி விளக்கு ஒன்றே போதாதா?"

கேட்டவளும் அயர்ந்தாள்; கேட்டு நின்றோரும் அயர்ந்தனர்! கேட்டுவந்த என் நெஞ்சும் ஆடியது; ஆடியது; கூத்தாடியது!

—வி. கே. செயராமன், ஆண்டர்சன்பேட்டை.

மொரார்ஜியின் புது வரி!

இருவர் கண்டனம்!

இந்திய நிதி மந்திரியின் புது வருட பட்ஜட் சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் பெரிய கலவரத்துக்குள்ளாக்கியிருக்கிறது. படமாக்கப்படும் பிலிம்களின் மீது போடப்பட்டிருக்கும் எதிர் வரியை (எக்சைசு டியூடி) இந்தியப் படத் தயாரிப்பாளர்கள் தாங்கவே முடியாது.

இப்பொழுது போடப்பட்டிருக்கும் புதிய எதிர்வரியினால் நிச்சயமாக சினிமாத் தொழில் பாதிக்கப்படும். பாதிக்கப்படுவதோடு மட்டுமல்ல; நசித்தும்விடும். சென்ற ஆண்டு வெளியான படங்களின் எண்ணிக்கையை வைத்து, இந்தப் புதிய வரியின் மூலம் 75 இலட்ச ரூபாய் வருமானம் வரலாம் என வருமான இலாகா கணக்கிட்டிருக்கிறது. எல்லா வகைகளிலும் அவர்கள் கணக்கு தவறு. சென்ற ஆண்டு வெளி வந்த படங்களின் அளவு இந்த ஆண்டும் படங்கள் தயாரிக்கப்பட்டால் புது வரிமூலம் வருமானம 75 லட்சம் மட்டுமல்ல, கோடிக்கணக்கிலேயே கிடைக்கலாம். இந்த வரியைக் கண்டு பயப்படும் தயாரிப்பாளர்கள், இந்த வரியினால் பாதிக்கப்படும் தயாரிப்பாளர்கள், இந்தத் தொழிலை விட்டே ஒதுங்கிவிடுவார்கள். அப்படி ஆகும்பட்சத்தில் இந்த 75 இலட்சம் ருபாய் வருமானம் வருவதுகூடக் கடினம். அதுமட்டுமல்ல; அரசாங்கத்தின் மற்றைய வரி இனங்களிலும் வருமானம் குறையும். அதாவது, தமாசா வரி வருமானம் பாதிக்கப்படும். வருமான வரி வருமானம் பாதிக்கப்படும். இதற்கும் மேலாக, இந்திய அரசாங்கத்தின் அந்நிய நாணயச் செலாவணி பெரிதும் பாதிக்கப்படும்.

சென்ற ஆண்டு அகில இந்தியாவிலுமாக 303 படங்கள் வெளியானதால்தான் இந்தியப் படங்களின் அந்நிய நாட்டு வருமானம் $1\frac{3}{4}$ கோடியாக உயர்ந்தது புதிய எதிர் வரியினால் (எக்சைசு டியூடி) தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்டால், உடனடியாக அந்நிய வருமானமும் பாதிக்கப்படும். சென்ற சில ஆண்டுகளாக அந்நிய நாடுகளிலே இந்தியப் படங்களுக்குக் கிராக்கி உயர்ந்துகொண்டே இருக்கிறது. இன்றைக்கு அந்நிய நாடுகளிடையே நமது இந்தியாவுக்குப் பெருமையையும் கௌரவத்தையும் தேடித் தந்தவர் பிரதமர் நேரு அவர்கள். அடுத்தபடியாக இந்தியாவுக்குப் பெருமைத் தேடித் தருபவை இந்தியப் பேசும் படங்கள். உலகத்திலேயே சினிமாத் தொழிலில் முதலிடம் வகிக்கும் அமெரிக்க நாடே, இந்தியப் படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு அண்மையில் அந்நாட்டின் மிகச் சிறந்த கௌரவப் பரிசுகள் இரண்டையும் கொடுத்திருப்பதே இதற்குச் சான்று.

இந்த நேரத்தில் படத் தயாரிப்பாளர்களை இந்தப் புதிய எதிர்வரி மூலம் திகில் அடையச் செய்துவிட்டால், அவர்கள் தொழிலை விட்டுப் போய்விட வேண்டிய நிலைமை ஏற்படலாம். நல்ல படங்கள் அதிகம் வராமல் போய்விடலாம். அந்நிய நாட்டு வருமானம் கணிசமாகக் குறைந்துவிடும். ஒரு முறை அந்நிய வருமானம் குறைய ஆரம்பித்தால் மீண்டும் அந்த வருமானத்தை அடையப் பெரும் பாடுபட வேண்டியிருக்கும்.

ஆக, உசிதமற்ற ஒரு வரியை விதித்து அதன் மூலம் 75 இலட்ச ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்து ஒரு தொழிலை நசித்துப் போகச் செய்து, இத்தொழிலின் மூலம் கிடைத்துவரும் பல கோடி ரூபாய் வருமானத்தை இழப்பது சரியா என்பதை இந்திய அரசாங்கம் தீர யோசிக்க வேண்டும். இந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களின் துரதிருஷ்டமோ என்னவோ திரு. மொரார்ஜி தேசாய்க்கு இத்தொழிலின் மீது ஒரு அலாதியான வெறுப்பு. அவர் தொழில்-வர்த்தக மந்திரியாயிருந்தபோது கச்சாபிலிம் இறக்குமதியை ஓ. ஜி. எல். லிலிருந்து நீக்கி, கச்சாபிலிம் கட்டுப்பாட்டைக்கொண்டு வந்தார். நிதி மந்திரியாக வந்தபிறகும், அதே பணியைத் தொடர்ந்து செய்ய விரும்பினார் போலும். யாருமே எதிர்பாராத ஒரு புது வரியைப் போட்டு இந்தத் தொழிலை ஒழித்துக் கட்டிவிட நினைக்கிறார். இதனால் ஏற்படப் போகும் விளைவுகளைப்பற்றி அவர் எண்ணவே இல்லை.

கடைசியாக, தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு வார்த்தை: நம்மாலியன்றவரை அரசாங்கத்துடன் போராடி இந்த வரியை நீக்க முயலுவோம். முடியாவிடில் தொழிலின் எல்லாப் பிரிவுகளிலுமுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து பெரும் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும்.

ஏ. எல். சீநிவாசன்,
தலைவர்,
தென்னிந்திய சினிமா ஸ்டுடியோக்கள் சங்கம்

★

சினிமாத் தொழில் அழிந்தால் அதனால் பல்லாயிரக்கணக்கான நடிகர்களும் அத்தொழில் சம்பந்தப்பட்ட அத்தனை பேர்களும் பெருமவதிக்குள்ளாவதுடன் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் ஆளாவார்கள்.

சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட எல்லோரும் இந்த புதிய வரியால் விளையும் கஷ்டங்களை உணர்ந்து ஒருமுகமாக அரசாங்கம் இந்த வரியை நீக்குதற்குப் பாடுபட வேண்டுமென்று தென்னிந்திய நடிகர் சங்கம் எல்லோரையும் அறைகூவி அழைக்கிறது.

டி. என். கிருட்டினன்,
செயலாளர்,
தென்னிந்திய நடிகர் சங்கம்.

தென்றல் நாளிதழ்

தென்றல் நாளிதழ் வெளியீடு ஒத்திபோடப்பட்டிருக்கிறது. விற்பனையாளர்கள் உரிய காலத்தில் அறிவிக்கப் படுவார்கள்.

கறையான் புற்றில்...

எழில்பொங்கி வழிகின்ற மாடி வீட்டின்
எதிரேயோர் தொழிலாளி நின்றி ருந்தான்
விழிகளிலே ஒளிபாய அவனின் மைந்தன்
வியப்பாக அவ்வீட்டைப் பார்த்துக் கேட்டான்:
"மழைவானை முத்தமிடும் இந்த வீட்டில்
வசிக்கின்ற மக்கள்யார்? அவர்கள் இந்த
எழில்வீட்டை எவ்வாறு கட்டி னார்கள்?
எத்தனைநாள் ஓயாமல் உழைத்திட் டார்கள்?"

குழந்தைமனம் எய்திட்ட கணையால் நெஞ்சம்
கொதித்துப்போய் தொழிலாளி கல்லாய் நின்றான்.
"விழலுக்குப் பாய்கின்ற நீர்போல் நாங்கள்
வீணாக உழைத்திட்டோம் முதலா ளிக்கே!
உழைக்காத பணமூட்டை பெற்ற திந்த
உயர்வீடு; தங்கம்போல் மின்னும் கூடு!
உழைத்திட்ட தொழிலாளர் பெற்ற தெல்லாம்
ஒருகுடிசை; சிறுகுடிசை; அதுவும் ஓட்டை!

இரவுபகல் கண்விழித்து வேலை பார்க்கும்
ஏழையெல்லாம் உணவின்றி வாடு கின்றார்;
திரைபோட்டுச் செல்வத்தை மறைத்த வண்ணம்
திருடர்கள் வாழ்கின்றார்; சமுதா யத்தில்
சரியான நீதியிலை நேர்மை யில்லை
சமத்துவமோ சிறிதளவும் இல்லை யிங்கே
விரிவான மனப்போக்கும் மனிதப் பண்பும்
விண்ணேறிப் பறந்ததுவோ விந்தை! விந்தை!!

சிறுமணலை மலையாக்கி வீடு கட்டிச்
செழித்திடலாம் எனமகிழும் கறையான் புற்றில்
கருநாகம் குடிபோன கதையாய் இன்று
நீளுலகே மாறிவிட்ட" தென்று சொல்லி
பெருமூச்சு விட்டபடி தந்தை பார்த்தான்.
பேசாத பதுமையென நின்றி ருந்த
சிறுவன்றன் விழிக்கதவைத் திறந்து மீண்டும்
தெளிவாக அவ்வீட்டைப் பார்த்துச் சொன்னான்:

"உழைக்காத முதலாளிக் குரிய செல்வம்
உழைக்கின்ற ஏழைகளுக் கில்லை யென்றால்
அழித்திடுவோம் இவ்வீட்டைப் பின்னர் அங்கே
அமைத்திடுவோம் நம்வீட்டை; ஏழை மக்கள்
பிழைத்திடுவர் நம்பேரைச் சொல்லிச் சொல்லி
பெருமையெலாம் நமைவந்து சேரு மன்றோ?
தழைக்காத மரமிந்த உலகத் தார்க்குத்
தருகின்ற பயனென்ன? வெட்டிச் சாய்ப்போம்!"

"துடிக்கின்ற இளமையினால் பேசு கின்றாய்.
தூளாக்கும் திட்டங்கள் நமக்கு வேண்டாம்.
இடிக்காமல் நொறுக்காமல் அந்த வீட்டை
ஏழையருக் குரித்தாக்க வேண்டும் மைந்தா!
விடியாத இரவில்லை; வைய கத்தில்
விலகாத இருளில்லை; அதுபோல் இன்னல்
பொடியாகிப் பறந்துவிடும்; உழைப்போர் வாழ்வில்
புதுப்பாதை காண்பரிதில் வியப்பே இல்லை!"

—துறையூர் ந. அலி. பி. ஏ.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

புண்மீதில் மொய்க்கின்ற ஈக்கள் போலப்
போகத்தில் ஆழ்கின்ற வையகத்தீர்!
பெண்மீதில் நீர்கொள்ளும் பேதை மோகம்
பேயாடும் சுடுகாட்டிற் சாம்பலாகும்!
மண்ணோடு மண்ணாவீர், ஆசைத் தீயில்
மனமழியும் விட்டிலென வீழந்து விட்டுக்
கண்மூடிக் கற்பனைகள் வளர்க்கின் றீரே!
காதலெனும் பொய்க்கனவு காண்கின் றீரே!

கவிஞன் :—

அழுகின்ற இதயங்கள் களிப்பில் நீந்த
அழியாத இயற்கைதரும் அமுத வீணை!
எழிலாரும் மனக்கிளையில் கிளிபோல் என்றும்
இன்புறவே ஆடிவரும் உயிரின் ஊஞ்சல்!
விழி"மீன்கள்" வீசுவதாம் அன்புத்" தூண்டில்"
விழிப்பினிலே வருங்கனவு, காதல், துன்பச்
சுழியோடுபோராடும் உலக வாழ்வில்
சுதந்தரத்தின் புதுப்பாடல், இன்பக் கூண்டு!

காவியமாம் இதயத்தின் உயிர்த்துடிப்பு;
கள்ளின்றிப் போதைதரும் கனிந்த அன்பு!
பூவினிலே சிறைப்பட்ட மணத்தைப் போலே
பூவையரின் நெஞ்சிற்குள் பதுங்கும் இன்பம்;
ஓவியனே அறியாத புதியவண்ணம்!
உறுத்துகின்ற மென்புதுப்பூ, குளிரும் செந்தீ!
நாவலர்கள் நவிலாத புதையல் உண்மை
நதியனைய மனப்பெருக்கு, மதுவின் தோழன்!

இயற்கை :—

நச்சுமலர்ச்சோலையிலே நெருப்புக் காற்று
நடமாடிவரும் வாழ்வில்,"காதல் என்னும்
இச்சையொரு பொற்கூண்டு, கற்பனைத்தேர்"
என்பதுபோல் ஆயிற்றே காதல்வாழ்வு!
கொச்சிநில மஞ்சளுடன் குங்கு மத்தைக்
குடதிசையில் செவ்வானிற் கனுப்பி விட்டுத்
தச்சன்வாள் அறுப்பதொரு மரமேபோலத்
தவிக்கின்றார் கைம்பெண்டிர் துடிக்கின் றாரே!

தண்காற்று வீசுங்கால் முத்தமிட்டுத்
தாமரைகள் ஒன்றின்மேல் ஒன்று சாயும்,
மண்குளிர மழைபொழியும் முகிலைக்கண்டு
மயில்,அழகு நடம்புரியும், அலையி ரண்டும்
விண்முட்ட ஆர்ப்பரித்துக் கடலரங்கில்
விம்மியெழும்; கைகோக்கும்; நுரை சிரிக்கும்!
கண்கூடாய் இங்கெல்லாம் காணும்அன்புக்
காதலினை மாந்தரிடை என்று காண்பேன்!

கடல்முற்றும் நீந்திவரக் கனவுகாணும்
கண்மூடி மனத்தைப்போல் காத லென்னும்
மடல்பரப்பும் மணத்தைநான் போற்றவந்தேன்;
மறுகரையைத் தொடுவதற்குள் சோர்ந்து விட்டேன்!
மடப்பத்தில் சிலபிதற்றி உளறிவிட்டேன்;
மதியுடையீர், பொறுத்திடுவீர்! மீண்டும் மீண்டும்
தடுமாறி விழுந்தாலும் எடுத்தணைக்கும்
தாய்போலே எனைவாழ்த்தி எடுத்துக் கொள்வீர்!

—மீ. கு. சீனிவாசன் (பி. ஏ. (ஆனர்சு.))
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்



மேலை. சி. மதிமாறன்,
திருநல்லூர்.

தனித்து இயங்கக்கூடிய தமிழ் மொழியில் தனித் தமிழ் ஆண்டுகள் கிடையாதா? இப்பொழுது தமிழாண்டுகள் என்று வழங்கி வருகின்ற "அறுபது ஆண்டுகளும்" தமிழ்தானா? ஈராறு திங்கள்களும் தமிழ்த் திங்கள்கள் தானா?

சக ஆண்டு (சாலிவாகன ஆண்டு) தென்னகத்தில வழங்கிய ஆண்டுதான். வட புல ஆண்டு அதுவன்று. விக்கிரம ஆண்டே. தவிர, கொல்லம் ஆண்டு (தற்போது 1135-வது ஆண்டு) தமிழக ஆண்டுதான். தமிழ ஆண்டு என்ற பெயருடனேயே நெல்லை மாவட்டத்தில் 'கொல்லம்' ஆண்டு என்பதன் மறு பெயராகவே வழங்குகிறது. தவிர, தமிழகத்தின் தமிழ் மாவட்டங்களுக்குள்ளேயே பிறந்த ஆண்டு மெய்கண்டான் ஆணடு (இது 737-ம் ஆண்டு). ஆனால் தமிழர் எல்லாருக்கும்-கேள்வி கேட்பவருக்கு எப்படியோ அப்படியே - மன நிறைவு தரும் ஆண்டுகளாய் இவற்றில் ஒன்றேனும் அமையவில்லை என்பது தெளிவு. பல்லாயிரம் ஆண்டு இலக்கிய இலக்கண வாழ்வு கண்ட தமிழர் கருதிய ஆண்டுகளாக இவை விளங்கவில்லை என்பதே காரணம்.

கலி ஆண்டு (இன்று ஆண்டு 6062) ஆங்கில ஆண்டினும் மூவாயிர ஆணடு முன் தொடங்கியது. ஆனால் கி. பி. 3-ம் நூற்ருண்டுக்கு அதாவது சக ஆண்டுக் காலத்துக்கு முன் இவ்வாண்டு குறித்த ஆதாரம் எதுவும் கிட்டியதில்லை. இரண்டாவது இதன் வழக்கு வடதிசையில் மிகுதி. மூன்ருவது தொடக்கத் திராவிட, தமிழ் இயக்கத்தார் சமய வாழ்வு முழுவதும் பஞ்சாங்கமும் முற்றிலும் ஆரியருக்குரியன என்று ஒதுக்கியிருந்தனர்.

கேள்வி கேட்பவர் 60 ஆண்டு வட்டம் தமிழருடையதென்றே கருதுவதாகத் தெரிகிறது. ஆனல அது தமிழருடையதேயாயினும் கலி ஆண்டு போலவே பஞ்சாங்கச் சார்புடையது. வானில் வரும் கோள்கள் யாவும் ஒரு வழிப்படும் கணத்துடன் ஊழி பேருழிகளும், பல ஒரு வரிசைப்படும் கணத்துடன் அறுபதாண்டு வட்டமும் வான நூலாரால் வகுக்கப்பட்டன. தொல்பழங் காலத் தமிழர் வான நூலறிவு சங்க இலக்கியக் குறிப்புகளாலேயே தெரிய வருகிறது. கிட்டத்தட்ட இன்றைய உலகின் வான நூலறிவளவில் பண்பாடு கொண்டு, தமிழர் மற்ற எல்லா உலகஇனங்களையும்விட, ஆரியரையும் விட, தம் ஆண்டு, மாத, வார, நாட்களை நுட்பதிட்பமாகக் கணித்திருந்தனர் என்றும், அதனைச் சரிவர முழுதுணராமல் பிழை மலிந்த இன்றையப் பஞ்சாங்கம் கொணர்ந்தவரே ஆரியர் என்றும் திராவிட ஆய்வியற் பேரறிஞர் கூறுகின்றனர்.

வினா விடுத்தவர் கேள்விக்கு இவை விளக்கங்களே தவிர விடையாகமாட்டா. தொல்பழங் காலத்திலிருந்து தமிழர் எவ்வாறு காலக் கணிப்பைக் குறித்தனர் என்பதை நாம் இன்று அறிய வழியில்லை. இலக்கியமன்றி எதுவும் நமக்கு வந்து எட்டவில்லை - அதுவும் பிற்பட்ட சிலவே நமக்கு வந்து எட்டியுள்ளன. அறிவு நூல்கள், ஆதாரங்கள் இலக்கிய வழிச் சிலவன்றிப பிற அழிந்தொழிந்தன. பழம் பொருளாராய்ச்சி ஏதேனும் இனிக் கொணரலாம்.

கல்வெட்டுக்களில் சக முதலிய ஆண்டுகள் தருவன மிகச் சில. ஆயினும் எங்கேனும் ஒன்றன் ஆண்டு தெரிந்தால் மற்றவை கணிக்கப்படுமளவு பிற குறிப்புகளை ஆராய்ந்தே வரலாற்ருசிரியர் இன்று காலம் கணித்துள்ளனர். இதற்கு உதவும் காலக் குறிப்புகள் பெரிதும் அரசன் பெயர், அவன் ஆட்சி ஆண்டு ஆகியவையும், சில இடங்களில் அவன் முன்னோர் விவரமுமேயாகும். ஆனல் சுமேரிய, எகிப்திய நாகரிகங்களில் இவையே தொடர்பாகக் கிடைப்பதால், அவற்றின் வரலாற்றுக் காலம் கணிப்பது எளிதாகிறது. தமிழகத்தில் அதுவும் தொடர்பாகக் கிட்டவில்லை. திருவிளையாடல் புராணங்களில் வடதிசைப் புராணங்களைப்போலவே சோழர் பாண்டியர் மரபு வரிசைப் பெயர்கள் உள்ளன. ஆனால் வடதிசைப் புராணங்கள் வரலாற்றுக்கு உதவும் அளவுகூட இந்தத் தென் திசைப் புராணங்கள் உதவவில்லை. மெய்யான ஒரு பட்டியலைப் பார்த்து இந்த வரிசை பொய்யாக அமைக்கப்பட்டிருப்பது தான் இதற்குக் காரணம்.

மெய்ப்பட்டியல்களோ, மெய் வரலாற்று ஆதாரங்களோ பழம் பொருளாய்வில் இனியும் கிடைக்க முடியாதென்றில்லை. கிடைக்க வழி உண்டு. அதுவரை வினா கேட்பவர் போன்றவர்கள் உள்ளத்தில் எழும் கேள்விகள் பெரிதும் கேள்விகளாகத்தான் நிலவமுடியும்.

வீழ்ந்த இடைக் காலம் நம் பின்திரையாக நிற்கிறது. வாழ்ந்த காலத்தை ஒரு புறம் நோக்கி வருங்கால வாழ்வுக்கு வகை காண விழைகிறோம் நாம். ஆனல்வாழ்ந்த காலச் செய்திகளை வகுத்து மெய் காணும் பொறுப்பும், வருங்கால வாழ்வுக்கு வகை கோலும் கடமையும் ஒருங்கே ஒரு சுதந்தர தேசியத்துக்கும் சுதந்தர தேசிய அரசியலுக்கும்தான் உரியது.

திருவள்ளுவர் ஆண்டு (இன்றைய ஆண்டு 1991) வினா எழுப்பியவர்கள் வினா அளவுக்கு ஒரு தற்காலிக விடையாக வருங்காலத் தமிழகம் அவாவும் தலைவர்களால் வகுக்கப்பட்டதே. வருங் காலப் பழம் பொருளாய்வு ஒரு வேளை உண்மையான திருவள்ளுவராண்டையே தந்து தமிழர்களுக்குத் திருந்திய புத்தொளி காட்டக் கூடும் என்று நினைக்கிறேன். அது கிறித்தவ ஆண்டைவிட, புத்தர் ஆண்டைவிட, கலி ஆண்டைவிடப் பழமையானதாய் இருக்கும் என்பதே என் நம்பிக்கை.

★

மா. பா. சாரதி, சென்னை.

'மூவருலா'வும், 'ஏரெழுபது'ம் எழுதி, இனப்பெருமை காத்த ஒட்டக்கூத்தனை, சூது எண்ணம் படைத்தவராகவும், பொருமை உள்ளத்தினராகவும், சிலர் சித்தரிப்பதேன்? ஒட்டக்கூத்தரைப்பற்றிய தங்கள் கருத்தென்ன?

(அ) ஒட்டக்கூத்தரும், கம்பரும் ஒரே காலத்தவர் என்பதற்கு. கற்பனை கலந்த கதைகளையன்றி ஆதாரமிக்க, இலக்கியச் சான்றுகள் ஏதேனும் உண்டா? கூத்தன் காலத்துக் குலோத்துங்கனும், கம்பன் காலத்துக் குலோத்துங்கனும் ஒருவரா?

ஒட்டக்கூத்தர் மூன்று வரலாற்றுப் பேரரசர்களைப் பற்றி உலாபபாடியவர். அவர் காலத்தையும் அவர் காலத்தில் அவருக்கிருந்த பதவி, புகழ், மதிப்பையும் நாம் திட்டவட்டமாக அறிகிறோம். அவர் எக்காலத்தவர் என்பது பற்றி அறிஞர் எவரிடையேயும் வேற்றுமை கிடையாது. ஆனல் கம்பர் எக்காலத்தவர், எந்த அரசனைப் பாடியவர் என்பது பற்றி இன்றும் அறிஞர் ஒருமுகமாகக் கூறமுடியவில்லை. அவர் ஒட்டக்கூத்தர் காலத்தில் இருந்தவர் என்று கூறவும் எத்தகைய ஆதாரமும் இல்லை.

சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணிபாடியது முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070 - கி. பி. 1120) காலத்தில்தான். அந்நாளையச் சோழ அரசின் புலவரவைத் தலைவரானமுதற் கவிச்சக்கரவர்த்தி அவர். அவருக்குப்பின் அதே 'கவிச்சக்கரவர்த்தி'ப் பட்டமேற்று மூன்று புவிச்சக்கரவர்த்திகள ஆட்சியில் அச்சக்கரவர்த்திகளின் ஆசிரியராயிருந்து (விக்கிரம சோழன் 1118-1135, இரண்டாம் குலோத்துங்கன் 1133 - 1150, இரண்டாம் இராசராசன் 1146-1143 ஆகிய) அம்மூவர் மீதும் 'மூவருலா'ப் பாடியவர் அவர் இந்த இரு கவிச்சக்கரவர்த்திகளைத் தான் வரலாறு அறியும். இவர்களைப்போலக் 'கவிச்சரவர்த்தி' என்ற பட்டம் கம்பருக்கு எந்தச் சோழராலோ, அரசர் பேரரசராலோ, சிற்றரசராலோ கொடுக்கப்படவில்லை. அது மக்கள் கொடுத்த பட்டம் என்றுதான் தற்காலக் கம்பர் கவிதைபன்பர்கள் கூறுவர்.

சோழப்பேரரசர்களில் பெரும் பேரரசர்கள் அத்தனை பேரும் சைவர்கள். அவர்கள் காலம் அரசியலில் சிவநெறிக்கே ஆதரவுமிக்கிருந்த காலம். கம்பர் கவிதைக்கு அந்நாட்களில் அரசியல் ஆதரவு ஏற்பட்டே இருக்கமுடியாது. அவர் ஒட்டக்கூத்தர் காலத்துக்கு நூற்ருண்டுகளுக்கு முன் இருந்தவரோ, அரை நூற்றண்டு ஒரு நூற்றண்டு பின்னிருந்தவரோதான் ஆகவேண்டும். அவர் 10-ம் நூற்ருண்டில் அதாவது பெரும் பேரரசச் சோழருக்குமுன் உத்தம சோழன் காலத்தவராவர் என்று சிலரும், 12-ம் நூற்ருண்டில் ஒட்டக்கூத்தரின் இரண்டாம் உலாவுக்குரிய இரண்டாம் குலோத்துங்கச்சோழர் காலத்தவர் என்று பலரும் கொள்கின்றனர். ஆனல் அவர் கவிதைப் பண்பும் அரசியல் ஆதரவற்ற நிலையும் நோக்க, அவர் மூன்ரும் குலோத்துங்கன் (1178-1218) காலத்தவர் என்றே கூறத்தகும். பாண்டியர் கையில் சோழநாடு சின்னபின்ன முற்றுச் சீரழிந்த காலத்தில் புயலிடை ஆறுதல் தந்த மலராகவே அவர் கவிதை விளங்கியிருத்தல் பொருந்தும்.

தமிழில் திருவள்ளுவர், ஔவையார் கதைகளைப்போல, மலையாளத்தில் எழுத்தச்சன், சமஸ்கிருதத்தில் காளிதாசன், பவபூதி முதலியவர்கள் கதைகளைப்போல, கம்பர் ஒட்டக்கூத்தர் கதையும் விசயநகர காலத்துக்குச் சற்று முன்னே பின்னே ஏற்பட்ட இடைக்காலப புதிய எழுத்தாளக் கும்பலின் 'புதின'க் கட்டுரைக் கலையேயன்றி வேறல்ல. அவற்றில் எது மெய்ம்மை, எது பொய்ம்மை என்று தேடும் பொறுப்பைவிட, எது பொம்மை என்று காணும் பொறுப்பே நம் காலத்துக்குப் பெரிது. அக்கதைகளைப் பற்றி நாம் கூறத்தகும் ஒரு நற்சான்று, அவை நல்ல கட்டுக் கதை எழுத்தாளர்களின் படைப்புக்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதுதான். ★

அறிவிப்பு

நான் மார்ச் முதல் சென்னையிலேயே தங்க வேண்டியிருப்பதால் எனக்கு மடல் எழுதும் இயக்க நண்பர்களும் மற்றவர்களும்,

"ஏ. கே. வில்லம்,
4/141, மவுண்ட்ரோடு,
சென்னை-6"

என்ற முகவரிக்கு எழுதும்படி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்புக்குரிய,
ஏ. கே. வில்வம்.

செழியன் உலா

வீட்டைத் துளைத்து அரிக்கிற பெருச்சாளி கண்ணுக்குத் தெரியவில்லை என்றாலும் நம்பலாம். கூரையைப் பிய்க்கிற யானை பார்வையில் படவில்லை என்போரை என்னவென்று சொல்வது? ஆசியப் பேரொளியின் கண்ணொளி மங்கியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

"ஊழலா? எங்கே? எப்போது?" என்று கேட்கிறார் நேரு. வீட்டில் நுழைந்திருக்கும் கொள்ளைக்காரனை அடித்து விரட்ட நாளும் நியாயமும் பார்க்கின்றார் அவர். என்ன செய்வது? துணிவற்றவர் கையில் நாட்டின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டு விட்டது. இனி மக்கள் தங்கள் தலைகளுக்குத் தாங்களே கல்பிடித்துக் கொள்ள வேண்டியதுதான்.

x x x

தோழர் சிந்தாமணி தேசுமுக் குற்றம் சாட்டியபோது, காங்கிரசார் எளிதாகப் புரட்டினர். அவர் நேருவின் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டதால்தான் இப்படிப் பேசுகிறார் என்று அவர்கள் சொல்லினர். ஆனால் உரக்க முழங்கிய அந்த வாய்களையும் அடைக்கும் ஆப்பு ஒன்று இன்று கிளம்பியிருக்கிறது.

"தூயவர்! உண்மையும் ஒழுக்கமும் ஒருரு ஆயவர்!" எனறெல்லாம் காங்கிரசாராலேயே புகழப்படும் நிலக்கொடைத் தலைவர் வினோபாதான் இப்போது எதிர்ப்புக் குரல் எழுப்புகிறார். "நாட்டில் ஊழலும் ஏமாற்று வேலைகளும் நடைபெறுவது உண்மைதான்! சொல்பவர் வேண்டாதவர் என்பதற்காக உண்மையை மறைத்துவிட முடியாது!" என்ற முறையில் அவர் பேசியிருக்கிறார். காந்தியாரின் சாமபலைக் கரைத்த நாளை சர்வோதய விழாவாகக் கொண்டாடும் இயக்கத்தின் தலைவர் அவர். ஆனால், காந்தியாரின் சாபலைக் கரைப்பதற்கு முன்பே, உண்மையையும் நேர்மையையும் காங்கிரசார் கரைத்துவிட்டனர் என்பதை அவர் அறியார் போலும்.

x x x

அப்பாவி மனிதர்கள் இலட்சியங்களையும் கொள்கைகளையும் கட்டிக் கொண்டு மாரடிக்கிறார்கள்.

— 8-ம் பக்கம் —

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.